# நாங்கள் அறுவர்

கி. சரஸ்வதி அம்மாள்

12984

(1960)

நாங்கள் அறுவர்



# நாங்கள் அறுவர்

கி. சரஸ்வதி அம்மாள்

## உள்ளே


| | | |
|---|---|---|
| நாங்கள் அறுவர் | .. .. | 1 |
| எங்கள் தாய் | .. .. | 6 |
| இல்லமே பல்கலைக் கழகம் | .. .. | 15 |
| எழுத்தார்வமும் பாராட்டும் | .. .. | 26 |
| ரிக்ஷாக்காரன் இட்ட கோடு | .. .. | 32 |
| பணத்தில் அளைந்தவர் | .. .. | 37 |
| தந்தையே தாயும் ஆனார் | .. .. | 39 |
| கோடைக்கானலில் | .. .. | 43 |
| கவர்னருக்கு விருந்து | .. .. | 51 |
| மாப்பிள்ளை தேர்தல் | .. .. | 56 |
| உதகமண்டலம் | .. .. | 59 |
| உறவினரிடம் அன்பு | .. .. | 70 |
| மன்னர் மறைந்தார் | .. .. | 74 |

# நாங்கள் அறுவர்

'நாங்கள் எழுவர்' (We Are Seven) என்று ஆங்கிலத்தில் ஒரு கவிதை உண்டு. அதுபோலச் சொல்லிக் கொள்வதாக இருந்தால், 'நாங்கள் அறுவர்' என்று கணக்குச் சொல்ல வேண்டும். அவ்விதம் தனித்துக் கூறும்படியான விசேஷம் என்ன என்று கேட்கலாம். எவ்வளவோ குடும்பங்களில் ஆறு குழந்தைகள் இருக்கிறார்களே எனலாம். இப்பொழுது போல ஒரு தம்பதி

மூன்று மக்களுக்கு மேல் பெறுவது சரியல்ல என்று ஒரு வரும் தடை உத்தரவு அக் காலத்தில் விதிக்கவில்லை. பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழும்படி வாழ்த்துவது தானே நம் வழக்கம்? ஜனப் பெருக்கமும் உணவுப் பற்றாக் குறையும் மக்கள் மனத்தையும் அரசாங்க நிர்வாகத்தையும் ஒருங்கே கவலைக்கு உள்ளாக்காத காலம் அல்லவா அது?

ஆனாலும் நாங்கள் அறுவர் என்று கூறிக்கொள்ள எங்கள் சகோதர சகோதரிகளுக்கு ஒரு தனி உரிமை இருந்தது என்றுதான் கூறுவேன். எங்களைப் போலச் சிறு பிராயத்தில், 'எங்களுக்கு நாங்களே' என்கிற மனோபாவத்தில் வளர்ந்தவர்கள் வெகு சிலரே இருந்திருப்பார்கள். விவரம் அறியாத இளம் பிராயத்தில் ஒருவர் பின் ஒருவராகக் குறுகிய காலத்திற்குள் தாயையும் தந்தையையும் இழந்து சமமான துக்கத்தை ஒன்றாக ஏற்ற எங்களுக்கு வேறு எவ்விதம் தோன்றும்? அவரவர்களுக்குத் தனித் தனியே வாழ்க்கையும் அதில் தனித்தனியே சுக துக்கங்களும் ஏற்படும் என்கிற எண்ணமே அப்பொழுது எங்களுக்கு இல்லை. ஒரு கப்பலில் ஒன்றாகப் பிரயாணம் செய்யும் பிரயாணிகளின் மன நிலையில் நாங்கள் இருந்தோம். விபத்துக்கு உள்ளாகாமல் குறித்த இடத்தைக் கப்பல் அடையும் வரையில் அதில் செல்லும் எல்லாருடைய தலைவிதியும் ஒன்றே அல்லவா? அது போலத்தான் எங்கள் தலையெழுத்துக்களும் ஒன்றாக இருப்பதாக எங்களுக்குத் தோன்றிற்று. அதனாலோ என்னவோ, உடன்பிறந்தவர்களுக்குள் சாதாரணமாக இருக்கும் பாசத்திற்கும் மேலான பாசத்தினால் நாங்கள் ஒருவருக்கு ஒருவர் பிணைக்கப்பட்டு, எங்களுக்குள் தான், தன்னுடையது என்கிற சுயநலமே தலைதூக்க இடமில்லாமல் வளர்ந்து வந்தோம்.

சின்ன வயதில் விளையாட்டுக்களில் ஏற்படும் சிறுசிறு சண்டைகள்கூட எங்களுக்குள் எடுத்துச் சொல்லும்படி உண்டானதில்லை. விளையாட்டுச் சாமான்களுக்கோ

ஆடை ஆபரணங்களுக்கோ, போட்டியோ பொருமையோ நாங்கள் அடைந்ததில்லை. ஆடைகளும் நகைகளும் அவரவர்களுக்குத் தனித் தனியே வேண்டும் என்கிற ஆசையின்றிப் பெண்கள் இருப்பதைப் பார்த்திருக் கிறீர்களா? பாவாடை கட்டத் தெரியாத சிறுமி கூட, தன் பெரிய தமக்கைக்குச் செய்யும் நகைகளையும் புடைவைகளையும் கண்டு தனக்கும் அவற்றைப்போல இந்த க்ஷணமே வேண்டுமென்று முரண்டும் பிடிவாதமும் செய் வாள். அக்காவின் வயது வரும்பொழுது தனக்கும் அதுபோலச் சகலமும் கிடைக்கும் என்று எவ்வளவு சமா தானம் சொன்னலும் அவள் கேட்பாளா? ஆனல் எங்கள் சகோதரிகள் நான்கு பேருக்குள்ளும் அவ்வாறு போட்டியோ பொருமையோ தோன்றினதே இல்லை. எங்கள் அகத்தில் பல வகையான ஆபரணங்களின் ஒரே ஒரு ஸெட், எல்லோருக்கும் பொதுவாக இருந்திருக்கிறது. எங்களில் ஒவ்வொருவருக்கும் தனித்தனி ஸெட்டுக்கள் செய்ய வகை இல்லாமலா அப்படி இருந்தது? இல்லை. மாதம் பதினயிரக் கணக்கில் பணத்தை வாரிக் கொட்டிய தந்தையின் மக்களாகப் பிறந்த எங்களுக்கு அந்த நிலைமை எவ்விதம் ஏற்படும்? நாங்கள் எங்களுக்குத் தனித்தனியாக வேண்டு மென்று ஆசைப்படாததுதான் அதற்குக் காரணம். எங்களில் ஒருவர் ஒன்றை அணிந்திருக்கும்பொழுது, 'நாம் அதை அணிவதற்கு இல்லையே!' என்று மற்றவர்கள் ஏக்கமோ குறையோ கொண்டால் அல்லவா அதுபோல விரும்பத் தோன்றும்? எங்கள் மூத்த தமக்கை, குடும்பத்தை முழுவதும் நிர்வகிப்பவள், தனக்கென்று செய்துகொள் வதைக் காட்டிலும், எங்களுக்குத்தான் பார்த்துப் பார்த்துச் செய்வாள். நாங்கள் எந்தச் சாமானையும் வித்தியாசமின்றி ஒருவருக்கு ஒருவர் கொடுத்துக் கொள்வோம். எல்லா ருக்கும் கடைசியான எங்கள் தம்பி, எல்லாருக்கும் மிகவும் பிரியமானவன். தாய் வேண்டிப் பிறந்த பிள்ளை அவன். கொஞ்சு நாள் முன் வரையும் நம் தேசத்தில் பெண் என்ருல்

ஒரு தாழ்வும் பிள்ளை என்ருல் ஓர் உயர்வும் இருந்து வந்தன அல்லவா?

இப்பொழுது நாங்கள் பிறந்த வரிசைக் கிரமத்தைச் சொல்லிவிடுகிறேன். அப்போதுதான் எங்கள் தாயின் மனப்போக்கைப் புரிந்துகொள்வீர்கள். முதலில் எங்கள் மூத்த தமக்கை; பிறகு எங்கள் தமையன்; பிறகு நாங்கள் மூன்று பெண்கள் அடுக்கடுக்காகச் சேர்ந்தாற்போல; அப்புறந்தான் எங்கள் தம்பி. வரிசையாக மூன்று பெண்களென்ருல், பிறகு பிறக்கப்போவது ஆணுக இருக்கவேண்டுமென்று எந்தத் தாய்தான் ஆசைப்படமாட்டாள்? ஆனுல் பெண் என்ருலும் எங்கள் தமக்கை பாலம், எங்கள் தாய் வேண்டிப் பிறந்தவள்தானும். எங்கள் தாய் கணவரகம் வந்து ஆறு ஏழு வருஷங்களாகியும் குழந்தை இல்லாமல் இருந்திருக்கிருள். மக்கட்பேறு இல்லை என்ருல் அக்காலத்தில் பெரும் குறையல்லவா? எங்கள் தந்தை கம்பீர புருஷர். எங்கள் தாயோ சுமார்தான். சரியான காலத்தில் மக்களைப் பெற்ருலாவது அந்தக் குறை தெரியாமல் மறைந்து போகும் என்கிற எண்ணம் அவளுக்கு. எங்கள் தகப்பனுர் அதை அவளிடத்தில் ஒரு குறையாக நினைத்தவர் அல்ல. வீட்டிலுள்ள பெரியவர்கள் ஒருகால் ஏதாவது அப்படிப் பேசியிருப்பார்களோ என்னவோ! எதுவானுலும் எங்கள் தாய்க்குத் தனக்குக் குழந்தை பிறக்க வேண்டுமென்கிற ஆவல் வெகுவாக மேலிட்டிருந்ததாகத் தெரிகிறது. கோயில் அம்பாளுக்குக் குழந்தை பிறந்த பிறகு அபிஷேகம் செய்து புடைவை சாத்தினதிலிருந்து அது வெளியாயிற்று.

எங்கள் பெரிய தகப்பனுரின் மகள் அடிக்கடி சொல்லுவாள்: "மன்னி- எங்கள் தாயை அவர்கள் அவ்வாறு தான் அழைப்பார்கள். ஏனெனில் எங்கள் சிறிய தந்தைகள் இருவரும் அத்தையும் அவ்விதம் அழைத்ததால் என்று நினைக்கிறேன்.—சாத்தின கால் இறங்கின புடைவைக்குப் பிறகு இந்தக் கற்பகாம்பாளுக்கு எவ்வளவு புடைவைகள்

வந்து குவிகின்றன! மன்னி கைராசி அது. அவள் ஒன்று செய்தால், அது ஆயிரமாகத்தான் பெருகும்." 'எங்கள் தாயின் கைராசிதான் அம்பாளுக்கு இவ்வளவு புடைவைகள் வருவதற்குக் காரணம்' என்று பொருள் படும்படி சொல்லுவாள். இன்றுபோல அப்பொழுது கோயிலுக்குச் செய்வதென்பது அவ்வளவாகக் கிடையாது. எங்கள் பெரிய தகப்பனார் மக்களுக்கு எங்கள் தாயைப்பற்றி இது போன்ற உயர்ந்த எண்ணந்தான் எப்பொழுதும். எங்கள் பெரிய தகப்பனாரின் மூத்த மகள், பட்டணத்தி லேயே வசித்தவள். அடிக்கடி மன்னி தனக்குச் செய்திருப் பவைகளை வெகு நாளைக்குப் பிறகுகூடச் சொல்லி நான் கேட்டிருக்கிறேன். எங்கள் தாய்க்கு மிகுந்த நல்ல மனசு என்றே எல்லோரும் சொல்லுவார்கள். அவள் இறந்த பிறகு எங்கள் தந்தை அவள் சுயநலமற்ற பெருந்தன்மை யைப் புகழ்ந்து கூறிக்கொண்டாராம். தமது சம்பாத்தி யத்தில் பாதிக்கு மேல் அவர் தானத்திலும் தர்மத்திலும் செலவு செய்தார். அவள் அதை ஒரு சமயமும் தடுத்துச் சொன்னதில்லையாம். "நீங்கள் சம்பாதிக்கிறீர்கள். உங்கள் இஷ்டம்போல அதைச் செலவு செய்ய உங்களுக்கு உரிமை இல்லையா?" என்றுதான் கூறுவாளாம். "இதுபோல எந்தப் பெண் நினைப்பாள்? பணம் எவ்வளவு இருந்தால்தான் என்ன? போதும் என்கிற மனம் யாருக்காவது வருமா? தன் மக்களுக்கு மேலும் ஆஸ்தி சேரட்டுமே என்கிற பேராசையே அவளுக்கு இல்லையே!" என்று அவர் வியந்து கொள்வாராம்

## எங்கள் தாய்

எங்கள் தாய்க்கு நல்ல மனசு இருந்ததோடு, நல்ல அதிருஷ்டமும் இருந்தது. அவளுடைய யோகஜாதகந் தான் எங்கள் தகப்பனுரை உன்னத நிலைக்குக் கொண்டு வந்தது என்றுகூடச் சொல்லுவார்கள். அக் காலத்தில் ஜோதிஷம் அவ்வளவு நன்ருகப் பார்த்திருக்கிறுர்கள். "இந்தப் பெண்ணை மணப்பவன் லக்ஷாதிபதி ஆவான்" என்று ஜோதிஷம் சொன்னுர்களாம். அது அப்படியே துளியும் பிசகாமல் பலித்துவிட்டது. இதுபற்றி ஒரு சிறு சம்பவங் கூடச் சொல்லுவார்கள். எங்கள் தாய்க்கு உள்ளூரிலேயே

ஒரு பெரிய இடத்து வரனைப் பார்த்தார்களாம். அவர்கள் கிருகத்துக்கு எங்கள் தாயின் பாட்டனர் நடைநடையாக நடந்திருக்கிருர். பெண் அழகில்லை; மேலும் பணத்திலோ அந்தஸ்திலோ தங்களுக்குச் சரியான சம்பந்தமில்லை என்பதனுல் அவர்களுக்குச் சம்மதம் இல்லை. ஆனல் அதை அப்படியே சொல்லாமல் சாக்குப் போக்குச் சொல்லி அவர்கள் அலைக்கழித்திருக்கிருர்கள். கடைசியில் எங்கள் தாயின் பாட்டனருக்கு அலுத்துப் போய்விட்டது. கையில் இருந்த பேத்தியின் ஜாதகத்தைப் பார்த்துக்கொண்டே, "ஹூம், இந்த ஜாதகத்தைப் பண்ணிக்கொள்ளக் கொடுத்து வைக்க வேண்டாமா? இந்தத் தனயோகத்தை அடையப் பிராப்தம் இல்லை; போகிருர்கள்!" என்று சொல்லிக்கொண்டே அங்கவஸ்திரத்தை உதறித் தோளில் போட்டுக்கொண்டு, அவர்கள் வீட்டை விட்டுக் கிளம்பிவிட்டாராம். பிறகு அந்த வீட்டின் பக்கமே அவர் போகவில்லை.

எங்கள் தந்தையைப் பெற்ற பாட்டனர் தாமாகவே விரும்பி எங்கள் தாயைத் தம் மகனுக்கு மணம் செய்து கொண்டிருக்கிருர். மன்மதன் போன்ற மகனுக்குச் சாதாரணப் பெண்ணு என்று அவர் நினைக்கவே இல்லை. "பெண் நல்ல குலம்; யோகஜாதகம்; அது போதும்" என்று தீர்மானித்துவிட்டார். எங்கள் தாயின் தந்தை பெரிய ஸம்ஸ்கிருத வித்துவான். அக்காலத்தில் அந்தப் படிப்புக்கு மிகுந்த மதிப்பு உண்டு. அவர் மகள் என்கிறதும் சேர்ந்து கொண்டது அவர் தீர்மானம் செய்ததற்கு. அப்பொழுதே பெண்ணுக்கு ஆயுசு நாற்பத்திரண்டுதான் என்று ஜோதிஷர்கள் சொன்னர்கள். "அந்த வயசுக்குள் வம்சம் விருத்தி அடையக் குழந்தைகள் பிறந்துவிடுவார்கள்; பாதகமில்லை" என்று கூறிவிட்டாராம் எங்கள் பாட்டனர். 'प्रजायै गृहमेधिनाम्' என்கிற கொள்கையை மனத்தில் கொண்டவர் போலும்! தாயில்லாத குழந்தைகளின்

நிலையைப்பற்றி அவர் நினைத்துப் பார்க்கவில்லை. ஆனால் ஜோதிஷம் அப்படியே பலிக்குமென்பதை அவர் கண்டாரா? மேலும் முப்பது வருஷங்களுக்கு முன்கூட்டியே கவலைப்பட யாருக்குத்தான் தோன்றும்? ஆனால் எந்த ஜோதிஷனும் எங்கள் தாய் இறந்த இரண்டு வருஷத்தில் எங்கள் தந்தையும் அவளைப் பின்பற்றுவார் என்று சொன்னதாகத் தெரியவில்லை. அது அவ்விதம் நேர்ந்தது எங்கள் துர்ப்பாக்கியந் தான்.

எதுவானாலும், எங்கள் தாய் உயிருடன் இருந்த வரையும் உன்னத நிலையில் இருந்தாள். சகல பாக்கியங்களும் அவளைத் தேடி வந்து அடைந்தன. அவள் மனத்திலும் நினைத்திராத தோட்டமும் பங்களாவும் மாடுகளும் கன்றுகளும் விதவித வாகனங்களும் வேலையாட்களும் அவளுக்கு ஏற்பட்டார்கள். அன்பான கணவரும், அருமைக் குழந்தைகளும், வீடு நிறையச் சுற்றமும் அவளுக்கு இருந்தார்கள். இவ்வளவிலும் அவள் ஒரு வேதாந்தி போலப் பற்றுதலின்றித் தனித்து இருந்தாளென்றால் அது பெரிய அதிசயம் அல்லவா? நகைக்கோ புடைவைக்கோ அவள் ஆசைப்பட்டதில்லை. அவள் மட்டும் விரும்பியிருந்தால், எங்கள் தந்தை தனத்தை அள்ளிக் கொட்டினதற்கு எவ்வளவோ ஆட்டிப் பூட்டிக்கொண்டிருக்கலாம். எங்களுக்கும் நிறையச் செய்து போட்டிருக்கலாம். அவள் அப்படி ஒன்றும் செய்யவில்லை. அவளைப்பற்றி நினைக்கும் பொழுதெல்லாம், மத்தியான்ன ஒழிவு நேரங்களில், பூஜை அறையில் வாசிஷ்டமும் கைவல்யமும் வைத்துக்கொண்டு அவள் படித்துக்கொண்டிருப்பதுதான் கண்முன் வருகிறது. அந்தப் புத்தகங்கள் தமிழ் மொழிபெயர்ப்புகள். தமிழ் எழுத்துக்கள்கூட அவள் பெரியவளான பிறகு கற்றுக்கொண்டவை. எழுத்துக் கூட்டித்தான் படிப்பாள். அப்படி இருந்தும் அவள் விடாது வாசித்துக்கொண்டிருந்ததை இன்று நினைத்துப் பார்த்தாலும், அவளுக்கு அவற்றிலுள்ள விஷயங்களைக் கிரகிக்க எவ்வளவு ஆர்வமும்

விடாமுயற்சியும் இருந்திருக்கவேண்டும் என்று ஆச்சரியம் உண்டாகிறது. நமக்கு அவனைவிட எவ்வளவோ படிப்பு அதிகம். நேராக அந்த ஸம்ஸ்கிருத பாஷையிலேகூடப் படித்துத் தெரிந்து கொள்ளலாம். அப்படி இருந்தும் ஊன்றிப் படிப்பது என்பது சாத்தியமாகவில்லையே! நமக்கு அந்த விஷயங்களைக் கற்றறிந்துகொள்ள ஆசை இல்லை. அதனால் மனம் அதில் ஈடுபட மறுக்கிறது. அவ்வளவு தான்; இல்லையா?

காலை நேரங்களில் எங்கள் வீட்டுப் பூஜை அறையில் வேதகோஷம் நிரம்பியிருக்கும். எங்கள் கிருகத்தில் வைதிகப் பிராமணர்கள் சாப்பிடாத நாளே இல்லை. வடையும் பாயசமும் அன்றுட உணவு வகைகளுடன் சேர்ந்தவைகளே. எங்கள் தாய் தலைக்கு ஸ்நானம் செய்து மிக்க மடியாக இருப்பாள். சிறுவர்களான நாங்கள் அந்தக் காலை நேரங்களில் சமையற் கட்டிடத்தின் பக்கமே செல்லக் கூடாது. நாங்கள் விழுப்பு ஆடைகளுடன் அங்கே சென்று மடிக்காரர்களின்மேல் பட்டுவிட்டால், எங்கள் தாய்க்குக் கோபம் வருமே என்கிற அச்சம் எங்களுக்கு. அத்றகாக நாங்கள் யாரும் அந்தப் பக்கமே போக மாட்டோம். அதற்கு ஏற்றபடி எங்கள் வீட்டுச் சமையற் கட்டிடமும் பங்களாவை விட்டுத் தள்ளி அமைந்திருந்தது. பங்களாவுக்கும் சமையற் கட்டிடத்துக்குமாக ரெயில்வே ஸ்டேஷன் பிளாட்பாரம் போல் ஒரு நீண்ட பாதை உண்டு. அதை நாங்கள் பிளாட்பாரம் என்றுதான் சொல்லுவோம். எங்கள் தாய், தனக்கு உடல் அலுப்பு மேலிடும்பொழுது, "படுத்துக்கொள்ளத் தேசிகாசாரி அகம் போயாக வேணுமே!" என்பாள். எங்கள் பங்களாவுக்கு எதிர்ச் சாரியில் தேசிகாசாரி என்பவர் வசித்து வந்தார். அவர் வீட்டளவு தூரம் என்கிற பொருளில் அப்படிச் சொல்வாள். பாவம்! அப்பொழுதே அவள் உடல்நிலை கெட ஆரம்பித்திருக்க வேண்டும்.

எங்கள் வீட்டுச் சமையற் கட்டிடம் எப்பொழுதும் திமுதிமுவென்று இருக்கும். பரிசாரகர்களே நான்கு பேர், பூஜை செய்யவென்று வீட்டோடு சாஸ்திரி, எங்கள் அப்பாவின் சிறிய தாயார், மற்றும் பந்துக்கள்—எல்லோரும் நிறைந்திருப்பார்கள். எங்களைப் போன்ற சிறுவர்களுக்கு அங்கு இடம் இல்லைதான். சாப்பாட்டு நேரம் தவிர மற்ற நேரங்களில் நாங்கள் பங்களாவில்தான் இருப்போம். நாங்கள் பெண்களாகையால் அங்கே தனி அறை உண்டு. மற்றப்படி அங்கும் கூட்டந்தான். எங்கள் சிறிய தந்தைகள், மாமன்மார்கள், பெரியப்பாவின் பிள்ளைகள், அத்தையின் மக்கள், எங்கள் மூத்த சகோதரியின் கணவர், எங்கள் இளைய சகோதரிக்கு மணமானபின் அவள் புருஷர் வேறு;—அப்பொழுதுதான் பெண்களுக்குப் பத்து வயசு ஆகவுமே மணம் முடித்தாக வேணுமே—இவ்விதம் கல்லூரி மாணவர்களின் எண்ணிக்கையே நிறைய உண்டு. மற்றும் பந்துக்களும் வருவோரும் போவோருமாக வீடு நிறைந்து இருக்கும். வேலையாட்களும் நிறைய இருப்பார்கள். பங்களா வேலைக்காரன், தோட்ட வேலைக்காரன், குதிரை ஆட்கள்—இப்படிப் பல ஆட்கள்.

அப்பொழுது எங்கள் வீட்டில் இரட்டைக் குதிரை பூட்டின வண்டி (Landau), ஒற்றைக் குதிரை வண்டி (Dogcart) என்றெல்லாம் பலவகை வண்டிகள் உண்டு. அவற்றுக்கென்று வெவ்வேறு குதிரைகளும் இருந்தன. எல்லாம் ஆஸ்திரேலியா தேசத்து உயர்ந்த குதிரைகள். அவைகளுக்குத் தனித்தனி ஆட்கள் வேண்டாமா? எங்கள் தம்பி ஏறிச் சவாரி கற்றுக்கொள்ளவென்று ஒரு சிறிய மட்டக்குதிரையும் எங்கள் தந்தை வாங்கியிருந்தார். காலை நேரங்களில் குதிரை ஏற்றத்துக்குரிய ஆடை அணிந்து, தன் சுருண்ட கேசம் குதிரையின் நடைக்குச் சரியாக எழும்பி எழும்பி விழ அவன் செல்லும் அழகை நாங்கள் எவ்வளவோ ஆசை பொங்கப் பார்த்து மகிழ்ந்

திருக்கிறோம். மொத்தத்தில் அப்பொழுது எங்கள் வீடு பெரிய ராஜாங்கமாகத்தான் இருந்தது.

எங்கள் தாயின் மரணத்துக்குப் பிறகு எங்கள் தந்தை இவற்றை வெகுவாகக் குறைத்துவிட்டார். தாமும் தம் குழந்தைகளும் நெருங்கி இருக்க நினைத்தார் போலும்! அதற்காகவே கணக்கின்றிச் சம்பாதித்துக்கொண் டிருந்த வக்கீல் தொழிலை விட்டுவிட்டு ஹைகோர்ட் ஜட்ஜ் பதவியை எங்கள் தாய் இறந்த பத்து நாட்களுக் குள் ஏற்றுக்கொண்டதாகச் சொல்லுவார்கள். அவர் தம் வாய்மொழியாலேயே தம்முடைய அத்தானும் தம் மிடம் மிகவும் பற்றுக் கொண்டவருமாகிய ராமசாமி என்பவரிடம், "இனிக் குடும்பத்தைப் பார்த்துக்கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் இந்தப் பதவியை ஏற்றுக் கொண்டேன். வக்கீல் தொழிலைப்போல ஓயாத வேலை யும் ஊர் சுற்ற வேண்டிய அவசியமும் இல்லையல்லவா?" என்றாராம். "அது சரி, சம்பாத்தியம் குறைந்து போகுமே! நீங்கள் எவ்வளவோ காரியங்களுக்குப் பணம் கொடுப்பீர் களே; அவற்றை நிறுத்தவேண்டிவருமே. என்ன செய் வீர்களாம்?" என்று சற்றுக் குறும்பாகவும் உண்மையாக வும் கேட்டாராம் அந்த அத்தான். எங்கள் தந்தையின் மனத்தை நன்கு உணர்ந்தவர் அவர். வந்து கேட்ப வருக்குத் தாராளமாக முன்போல் பண உதவி செய்ய முடியாமற் போகுமே என்கிற வருத்தம் எங்கள் தந்தைக்கு இருக்கத்தான் இருக்கும் என்பது அவருக்குத் தெரியும். பணத்தைச் சம்பாதித்துத் தர்மத்தில் செல விடவேண்டும் என்கிற கீதா வாக்கியத்தைப் பின் பற்றினவர் அவர். கல்வி விருத்திக்காகவும் தொழில் அபிவிருத்திக்காகவும் பணத்தைக் கொடுக்க அவர் தயங்கினதே இல்லை. எவ்வளவோ ஆரம்ப ஸ்தாபனங் களுக்கு அவர் அளித்திருக்கும் நன்கொடைகளைப்பற்றி அவர் ஜீவிய சரித்திரத்தைப் படித்தால் தெரியவரும். நம்முடைய ஊரில், சம்பாதிக்கும் பணத்தைத் தர்மத்தில்

செலவிடுவது என்பதற்கு எங்கள் தந்தைதாம் வழி காட்டியாக இருந்திருக்கிருர் என்று நினைக்கிறேன். அவருக்குப் பிறகே பெரிய கொடையாளிகள் இந்நகரில் தோன்றி நிறையக் கொடுத்தும், தாங்களே பெரிய ஸ்தாபனங்கள் நிறுவியும் வந்திருக்கிருர்கள்.

தம் மக்களான எங்களைப்பற்றி அவர் எவ்வளவோ எண்ணங்கள் கொண்டிருக்க வேண்டும். நாங்கள் கோழைகளாக ஆகாமல், தைரியசாலிகளாகவும், நல்ல படிப்பாளிகளாகவும், நம் நாட்டுப் பண்பும் பழக்கமும் நன்கு தெரிந்தவர்களாகவும், சுருங்கச் சொல்லுமிடத்து எல்லா விதத்திலும் மேன்மையான மக்களாகவும் விளங்க வேண்டு மென்று எண்ணியிருக்கிருர் என்று இப்பொழுது நினைத்துப் பார்க்கும்பொழுது தோன்றுகிறது.

எங்கள் தாய் ஒரு வருஷம் படுக்கையாகக் கிடந்து இறந்து போனுள். அவள் நோய்வாய்ப்பட்ட சில நாள் வரையும், அவள் படுத்திருந்த அறைக்கு நாங்கள் அடிக்கடி போவோம். எங்கள் தம்பி அப்பு - நாங்கள் அவனை அருமையாக அழைத்த பெயர் அது - அவளுடனேயேதான் இருப்பான். அவளுடைய செல்ல மகனல்லவா? அவனுக் குத் தனிச் சலுகை. என்னை அவள் தனியே அழைத்துத் தன் கால்களைப் பிடிக்கும்படி சொல்வாள். "உன் கைதான் பட்டுப்போல எவ்வளவு மிருதுவாக இருக்கிறது! சற்று என் காலைப் பிடியேன்" என்பாள். அவளுக்கு வியாதியின் கொடுமை, எப்பொழுதும் கால்கடுப்பும் வலியுமாக இருக்கும் போலும்! என் செய்கையை இப்பொழுது நினைத்தால் வெட்கமும் வருத்தமுமாக இருக்கிறது. நான் சற்றுப் பிடித்துவிட்டு மெல்ல அவ்விடத்தை விட்டு நழுவி விடுவேன். சில சமயம் அவளே அங்கலாய்த்துக்கொண்டு, "என் வலி தீராது. அதற்காக நீ குழந்தை; உன்னைச் சிரமப்படுத்துவார்களா? போதும், விளையாடு போ" என்று சொல்வாள். அவளுக்கு நோய் முற்ற முற்ற எங்கெங் கிருந்தோ வைத்தியர்கள் வந்து பார்க்கத் தொடங்கி

ஞர்கள். எப்பொழுதும் அவள் படுக்கை அறையில் டாக்டர்களின் கூட்டந்தான். எப்படியாவது அவள் பிழைத்து எழ வேண்டுமென்று எங்கள் தந்தை பல ஊர்களிலிருந்தும் வைத்தியர்களை வரவழைத்து வைத்தியம் செய்தார்.

வர வர எங்களுக்கு அவள் அறையின் பக்கம் செல்லவே ஒருவகை அச்சம் ஏற்பட்டுவிட்டது. நான், எனக்கு அடுத்த பெரியவள் சாவித்திரி, எங்கள் தம்பி அப்பு ஆகிய மூவரும் உள்ளே சென்று தாயைப் பாராமலே இருந்தோம். இதை எங்கள் தந்தை கவனித்திருக்க வேண்டும். ஒரு நாள் நான் சாப்பிட்டுவிட்டுச் சமையற் கட்டிடத்தினின்றும் வந்துகொண் டிருந்தேன். அவர் உணவு கொள்வதற்காக உள் நுழைந்துகொண் டிருந்தார். எதிரில் கண்ட என்னிடம், "உங்கள் அம்மா செத்துப் போய்விடுவாள்; போய்ப் பார்" என்று சாதாரணமாகச் சொல்லிச் சென்றார். அந்தச் சொற்களை இப்பொழுது எழுதும்போதுகூடக் கண்களில் நீர் பிரவாகமாகப் பெருக் கெடுக்கிறது. அப்பொழுது எப்படி இருந்திருக்கும்! நினைத்துப் பாருங்கள். இருதயம் வெடித்துவிடும்போல் ஆயிற்று; விசிப்பு எழுந்தது. 'இவள் இறந்துவிடுவாள்' என்கிற கசப்பான உண்மை எங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும்; வரப்போகும் துக்கத்தை ஏற்க மனசு பழக வேண்டும் என்றுதான் அவர் முன்கூட்டியே அவ்விதம் சொல்லியிருக்க வேண்டும். எங்கள் தாய் இறந்துபோன அன்றுகூடப் படுக்கையில் தூங்கிக்கொண்டிருந்த சிறுவர் களான எங்கள் மூவரையும் அவர்தாம், "உங்கள் அம்மா செத்துப் போய்விட்டாள்; எழுந்திருங்கள்" என்று தட்டி எழுப்பினார். துக்கத்தைத் தெம்புடன் ஏற்க மனத்திற்குத் தைரியம் ஊட்டவே அவர் அவ்விதம் சாதாரண நிகழ்ச்சியைக் கூறுவதுபோலக் கூறியிருக்கிறார் என்று நினைக்கிறேன்.

எங்கள் தாய்க்கு நடு நிசிக்குப் பிறகு பிராணன் போயிருக்கிறது. மூன்று நாளாகவே நினைவு சரி இல்லாமல் உடம்பு அதிகமாக இருந்தது. எங்கள் தமக்கைகள் பாலம், சுப்பலம், தமையன் மணி இவர்கள் அவளுடனேயேதான் இருந்திருக்கிறார்கள். அவர்களுக்குச் சாப்பாடு, தூக்கம் ஒன்றும் கிடையாது. தாயை இழந்துவிடப் போகிறோம் என்று நிச்சயமாகத் தெரிந்தபின், அவர்களுக்கு உறக்கமோ பசியோ எங்கிருந்து வரும்? தாயை இழப்பதென்றால் அது சாமானியமான துக்கமா? ஈசுவரனால் கூட நிவர்த்தி செய்ய முடியாத குறையல்லவா அது? எங்கள் தாயும் மனசோடு எங்களை விட்டுச் சென்றிருப்பாளா? என்னதான் அதிகப் பாசத்தில் கிடந்து அவள் உழலாவிட்டாலும், தெய்வம் போன்ற கணவரையும், அன்பான குழந்தைகளையும் விட்டுச் செல்ல அவளுக்கு ஒருகாலும் மனம் இடம் கொடுத்திராது. விதியின் செயலுக்கு யார் என்ன செய்ய முடியும்?

# இல்லமே பல்கலைக் கழகம்

எங்கள் தாய் படுக்கையாகப் போனதிலிருந்தே எங்கள் மூத்த தமக்கைதான் குடும்பத்தை நிர்வகித்து வந்தாள். இருபது வயது இளம்பெண்; அரசாங்கத்துக்குச் சமமான பெரிய குடும்பம்; அதன் பொறுப்பை ஏற்று நடத்துவது சாமானியமா? அவள் சாமர்த்தியமாக நிர்வகித்தது எங்கள் தந்தைக்கே அவளிடத்தில் பெருமதிப்பையும் பெருமையையும் உண்டாக்கியது. அன்றையிலிருந்து குடும்ப சம்பந்தமான எதையும் அவளுடன் கலந்து ஆலோசனை செய்யத் தொடங்கினர் என்றால் அவள்

திறமையில் அவருக்கு எவ்வளவு நம்பிக்கை ஏற்பட்டிருக்க வேண்டும்!

ஒரு விதத்தில் என் சகோதர, சகோதரிகள் எல்லாருமே ஒவ்வொரு வகையில் விசேஷ புத்தி கூர்மை உள்ளவர்கள் என்று சொல்ல வேண்டும். என் இளைய தமக்கை சுப்பலம் சிறு வயதிலிருந்தே வெகு சூடிகை என்று பெயர் வாங்கியவள். பள்ளி சென்று பெண்கள் படிப்பது என்பது அப்பொழுதுதான் ஆரம்பமாகியிருந்தது. எங்கள் தந்தை பெண்கல்வி அவசியம் என்பதை வற்புறுத்தி அதற்கு வேண்டுமென்கிற முயற்சிகளைச் செய்தவர்களில் முதன்மையான ஒருவர். தம் பெண்களுக்கு நன்ருகக் கல்வி போதிக்க வேண்டுமென்று நினைத்திருந்தார். அவர் மட்டும் இன்னும் சிறிது காலம் உயிருடன் இருந்திருந்தால் நாங்கள் ஒவ்வொருவரும் பெரிய மேதைகளாக ஆகியிருப்போம். எதற்கும் கொடுத்து வைத்திருக்க வேண்டாமா?

என் தமக்கைகள் சுப்பலமும் சாவித்திரியும் பள்ளி செல்லத் தொடங்கியிருந்தார்கள். சுப்பலம் புருஷப் பிள்ளைகளுக்குச் சரியாக வெகு நன்ருகப் படிப்பாள். கேட்ட கேள்விகளுக்குப் பளிச்சென்று விடை கூறுவாள். அவளுடன் பேசுகிறவர் யாரும் அவள் புத்தியை மெச்சுவார்கள். அவளை மகாபுத்திசாலி என்பதாக எங்கள் வீட்டில் எல்லோருமே கொண்டாடுவார்கள். எங்கள் தாய் மட்டும் தனக்குக் கோபம் வந்தால் அவளைப் புருஷாமிருகம் என்று வைவாள். பெண்குழந்தைகளுக்குச் சகஜமான பாவாடை நகைகளில்கூட ஆசையில்லாமல் புருஷப் பிள்ளைகளுக்குச் சரியாகப் படிக்கிருள் என்பதற்காக அவ்வாறு சொல்வாள். உண்மையிலேயே என் தமையன்மாதிரி தானும் வேஷ்டி கட்டிக்கொண்டாலும் கட்டிக்கொள்வாள் என்றுதான் சொல்லுவார்கள். அவ்விதம் இருந்தவள், எங்கள் தாய் படுக்கையாகக் கிடந்தபொழுது பெண்களுக்கே உரிய நர்ஸின் வேலையை எப்படித்தான் செய்திருக்கிருள்

தெரியுமா? டாக்டர்களுடன் பேசி அவர்கள் சொற்படி மருந்தோ ஆகாரமோ மணிக்கணக்குத் தப்பாமல் கொடுத்து நோயாளிக்குச் செய்ய வேண்டிய சகல பணிவிடைகளேயும் வெகு சிரத்தையாகச் செய்திருக்கிருள் என்ருல் அதற்கு மேல் சொல்ல என்ன இருக்கிறது?

வியாதியில் அவஸ்தைப்பட்ட தாய்க்கு எங்கள் தமையனும் எவ்வளவோ செய்தான். எங்கள் தாய் அது குறித்து, நாம் இப்படிப் படுத்துக் கிடக்கிருேமே என்கிற வருத்தத்திலும் எவ்வளவோ பெருமைப்பட்டிருக்கிருள். தன்னேப் பார்க்க வருகிறவர்களிடமெல்லாம் தன் குழந்தைகள் தனக்குச் செய்வதைப் பாராட்டிக் கூறுவாள். "அவர்களே இவ்வளவு செய்யும்படியாக நான் படுத்துக்கொண்டுவிட்டேனே!" என்று அங்கலாய்த்துக்கொள்வாள். நோயில் படும் அவஸ்தையிலும், தன் மக்கள் தனக்குப் பணிவிடை செய்கிருர்கள் என்கிற திருப்தி அவளுக்கு ஏற்படட்டும் என்றுதான் எங்கள் தந்தை அவர்களே அவளுக்குப் பணி செய்யும்படி விட்டிருக்க வேண்டும். இல்லாவிட்டால் எங்கள் வீட்டில் அவளுக்குப் பணி செய்ய ஆட்களுக்குக் குறைவா? குழந்தைகளுக்கும், நம் அம்மாவுக்கு நாம் பணிவிடை செய்கிருேம் என்கிற சமாதானம் இருக்கட்டும் என்று நினேத்திருப்பார் போலும்.

இரவு பகல் கண் விழித்துத் தாயைக் கவனித்துக் கொண்டபோதிலும் எங்கள் தமையன் அவ் வருஷத்துப் பரீக்ஷையில் முதல் வகுப்பில் தேறியிருந்தான். அவனுக்கு அது எப்படிச் சாத்தியமாயிற்று என்று எல்லோருக்குமே ஆச்சரியந்தான். அவன் என்றுமே ஒன்றும் தன் மனத்தைப் பெரிதாகப் பாதிக்கும்படி விடமாட்டான். சிறு வயதிலேயே அவனது தனிப் போக்கைக் கண்டு எங்கள் பெரிய தகப்பஞர் அவனுக்குப் 'பிரம்ம நிஷ்டன்' என்று பெயர் இட்டிருந்தார். தாய் தந்தையரை இழந்த

பொழுதும், மனைவியை இழந்தபொழுதும், அவள் கடைசி யாக விட்டுச்சென்ற பத்து வயசு மகனை இழந்தபொழு தும் எல்லாச் சமயங்களிலும் அவன் ஒரே விதமாகத்தான் இருந்திருக்கிறான். ஒன்றுக்கும் மனம் கலங்கித் தவித்து விடவில்லை. ஒருவரிடத்திலும் தன் துக்கத்தை வெளி யிட்டு மனச் சமாதானத்தைத் தேடவில்லை. அது அவன் சுபாவம். இன்றும் அவன் வாழ்க்கை ஆசிரம வாசியின் வாழ்க்கையாக அமைந்துவிட்டது.

அவனுக்குக் கலாரசனை மிகுதியாக உண்டு. ஸம்ஸ்கிருத காவியங்களையும், ஷேக்ஸ்பியர் முதலான ஆங்கிலப் பேராசிரியர்களின் புத்தகங்களையும் வெகுவாக ரசித்துப் படிப்பான். எங்கள் மாமா ஒருவர், நல்ல ரசிகர். அவருக்குக் கண்களில் ஏதோ உபத்திரவம். தாமே புத்தகங்களைப் படித்து இன்புற முடியாது. அதற்காக எங்கள் தமையனை வாசிக்கச் சொல்லிக் கேட்பார். அப்பொழுது என் தமக்கை சாவித்திரி, நான், என் தம்பி அப்பு மூவரும் வெகு சுவாரசியமாக ஒரு நாளெல்லா மானாலும் கேட்போம். பாஷை தெரிந்து பொருள் விளங்காவிட்டாலும், அவன் படிக்கும் மாதிரியில் எங்களுக்குப் பொருள் விளங்குகிறது போலவே சுவாரசி யம் தோன்றும். அவன் படிக்கும் தொனியே அப்படி.

சாவித்திரிக்கும் இந்தத் திறமை நிறைய உண்டு. காவியங்களில் அழகுணர்ச்சி என்கிறார்களே, அது சுபாவ மாக அவளுக்கு ஏற்பட்டிருந்தது. புத்தகங்களுடைய நடையையும், சொற்களின் அழகையும் உணர்ந்து ரசித் துப் படிப்பாள். அவள் ஒரு புத்தகத்தைப் பற்றிக் கூறும் அபிப்பிராயம், படித்த மேதைகளும் ஒப்புக்கொள் ளக்கூடியதாக இருக்கும். தமிழிலும் ஆங்கிலத்திலும் சின்ன வயதிலிருந்து சுத்தமாகவும் அழகாகவும் எழுது வாள். கலாசாலை சென்று பி. ஏ., எம். ஏ. பட்டங்கள் பெறுவிட்டாலும், அவளுடைய கல்வி ஞானம் அந்தப் பட்டதாரிகளுக்குக் குறைந்ததல்ல. ஆடை அலங்காரங்

களில்கூடச் சிறு வயதில் அவளுக்குக் கருத்து அதிகம்.

இது விஷயத்தில் சுப்பலத்திற்கும் சாவித்திரிக்கும் நேர்விரோதம் என்று சொல்லலாம். சுப்பலம் வெளிக் கிளம்புவதென்ருல், எந்தப் புடைவையாளுலும் ஒரு நொடி யில் மாற்றிக்கொண்டு கிளம்பிவிடுவாள். நெற்றிக்குப் பொட்டு இட்டுக்கொள்வதற்குத்தான் கண்ணுடி பார்ப் பாள். சாவித்திரி அப்படி அல்ல. இப்பொழுதுபோல எதை உடுத்தலாம் என்று யோசனை செய்யும் அளவுக்குப் பீரோ கொள்ளாத ஆடைகள் அப்பொழுது எங்களுக்கு இல்லை. இருந்த சொற்ப ஆடைகளிலும் சாவித்திரிக்கு, 'சில நமக்குப் பொருந்தா' என்று தோன்றிவிடும். மணிக் கணக்கில் கண்ணுடிமுன் நின்று செய்துகொள்ள அலங் காரச் சாதனங்களும் இப்பொழுதுபோல அப்பொழுது இல்லை. முகப் பவுடர்கூட நாங்கள் உபயோகித்ததில்லை. கண்ணுக்கு மை தீட்டிக்கொள்ளும் பழைய வழக்கமும் எங்களுக்கு இல்லை. அப்படி இருந்தும், சாவித்திரிக்குக் கண்ணுடியின் முன்நின்று அலங்காரம் செய்துகொள்ளச் சிறிது நேரம் பிடிக்கும். கண்ணுடி பார்த்து நெற்றியில் பொட்டைச் சரி செய்வதிலேயே காலதாமதம் செய்து விடுவாள். ஒரு சமயம் எங்கள் பெரிய தந்தை அவள் கண்ணுடியின்முன் சிறிது நேரமாக நிற்பதைப் பார்த்து விட்டார். அவ்வளவுதான்; 'Vanity' (ஜம்பம்) என்று அழைக்கத் தொடங்கிவிட்டார். சாவித்திரிக்குப் பெரிய தவிப்பாகப் போய்விட்டது. தான் ஏதோ கண்ணுடியில் பார்த்துக்கொண்டதை அவர் அழகு பார்த்துக்கொள் வதாகத் தவருக நினைத்துவிட்டாரே என்கிற தவிப்புத் தான். கண்ணுடி பார்த்து அழகு செய்துகொள்வது தப்புப்போல அப்பொழுது ஓர் எண்ணம்.

ஒரு சமயம் எங்கள் தந்தை உடை அணிந்து கொண்டு வெளிச் செல்லக் கிளம்பிக்கொண்டிருந்தார். அவருடைய உடை எல்லாம் சலவை செய்த மல் வேஷ்டி

யைக் கச்சமாகக் கட்டிக்கொள்வது, மேலே வெஸ்ட்டும் நீளக் கோட்டும் அணிந்து கால்களுக்கு ஜோடு போட்டுக்கொள்வதுதான். தலைக்குத் தலைப்பாகை, மேலே மடிப்போடு கூடிய அங்கவஸ்திரம். ஆனால் அதைவிட உயர்ந்த ஆடை வேறு இருப்பதாகத் தோன்றினதில்லை. அது அவரது கம்பீர உருவத்தை நன்றாக எடுத்துக் காட்டிக்கொண்டிருக்கும். அன்று அவர் கட்டியிருந்த வேஷ்டி கால்புறத்தில் சிறிது தூக்கி இருந்தது. அதைப் பார்த்துவிட்டுச் சாவித்திரி, பக்கத்திலிருந்த எங்கள் யாரிடமோ, "அப்பா வேஷ்டி தூக்கிக்கொண்டிருக்கிறதே; சரியாக இல்லையே!" என்று ரகசியமாகச் சின்னக் குரலில் சொன்னாள். அப்படியும் அது அவர் காதில் விழுந்துவிட்டது. "சாவித்திரி என்ன சொல்லுகிறாள்?" என்று கேட்டுத் தெரிந்துகொண்டு சரி செய்துகொண்ட பிறகுதான் சென்றார். அவளுக்கு அழகு உணர்ச்சி அதிகம்; அவள் சொன்னால் சரியாகத் தான் இருக்கும் என்கிற எண்ணம் அவருக்கு. சாவித் திரிக்குத்தான், தம் காரியத்திலேயே குறை கண்டு பிடிக்கிறாள் என்று அப்பா நினைத்திருப்பாரோ என்கிற கவலை மேலிட்டது. எங்களுக்கு அவரிடம் அவ்வள வுக்கு ஒரு மரியாதை.

அநேக நாட்களில் மாலையில் அவர் வீடு திரும்பும் பொழுது பூமாலையும் செண்டுமாக வருவார். அவர் அரசியலிலும் ஈடுபட்டிருந்தார். கூட்டங்களில் பேசிவிட்டோ அக்கிராசனம் வகித்துவிட்டோ வருவார். ஒரு சமயம் அவர் கொண்டுவந்த மிகப் பெரிய ரோஜாப் பூச்செண்டை, சாவித்திரி எங்கள் வீட்டுப் பலகை ஹாலின் முன்புறத்து வாசற்படியின் தலையில், செண்டு முன்புறம் தெரியும்படி செருகி வைத்தாள். அது உள் நுழையும்பொழுது காலையில் உதித்தெழும் சூரியனைப் போலச் சிவந்து மலர்ந்து காட்சி அளித்தது. அதைப் பார்த்த எங்கள் தந்தை, "அவளுக்குத்தான் அழகு

எப்படித் தெரிகிறது, பார்!" என்று மிகவும் வியந்து பாராட்டினார்.

சங்கீதத்திலும் அவளுக்கு ஓரளவு நல்ல ஞானம் உண்டாயிற்று. நன்ருகப் பிடில் வாசிப்பாள். சுப்பலத்திற்கும் சாவித்திரிக்கும் ஒன்ருகத்தான் பாட்டுக் கற்றுக் கொடுத்தார்கள்; என்ருலும், சாவித்திரிக்குத்தான் அது விசேஷமாகச் சொல்லும்படி வந்தது. படிப்பைக் கிரகித்துக்கொள்வதில் சுப்பலத்திற்கு இருந்த வேகம் சாவித்திரிக்கு இல்லை. ஆனுலும் தெளிவாகவும் பிழையின்றியும் கற்றுக்கொண்டது அதிகம். சுப்பலம் ஆங்கிலத்தில் சுமாராகச் சம்பாஷணை நடத்திவிடுவாள். சாவித்திரியால் அது முடியாது. இலக்கணப் பிழை நேர்ந்து விடுமோ என்கிற பயத்திலேயே பாதியும் பேசாதிருந்து விடுவாள்.

எங்கள் தந்தை நிர்வாக சபை அங்கத்தினர் உத்தியோகம் பார்த்தபொழுது இந்த வித்தியாசம் வெகுவாகப் பாதித்தது. வெள்ளைக்காரர்களுடன் அதிகத் தொடர்பு கொண்ட உத்தியோகமல்லவா அது? ஆகையால் வெள்ளைக்காரர்களை அன்ருடம் பார்க்கும்படியும் பேசும்படியும் இருக்கும். நாங்கள் அவர்கள் வீட்டிற்குச் செல்வதும், அவர்கள் எங்கள் வீட்டிற்கு வருவதும் அதிகம். அப்பொழுதெல்லாம் சுப்பலந்தான் அவர்களை வரவேற்றுப் பேசி எல்லாம் செய்வாள். சாவித்திரி ஏதாவது அவள் பேச்சில் பிறகு தப்புக் கண்டுபிடித்தால் சுப்பலத்திற்குக் கோபந்தான் வரும். "நீ பேசுகிறதுதானே? வாயைத் திறவாமல் கேட்டுக்கொண்டிருந்துவிட்டுத் தப்புக் கண்டுபிடிக்கிருயே!" என்பாள். அவர்கள் இருவருடைய மாதிரியே வேறுதான்.

எங்களுக்கு ஸம்ஸ்கிருத வாத்தியார் ஒருவர் உண்டு. அவருடைய பாஷா ஞானம் சுமார்தான் என்று நினைக்கிறேன். ஏனெனில் அவர் பல சொற்களுக்குப் பொருள் விளக்காமல் அதிலுள்ளபடியே கூறிக்கொண்டு போய்

விடுவார். சுப்பலத்தினுடைய பாடம் பெரிய பாடம். காவியங்கள், நாடகங்கள் என்று படித்துக்கொண் டிருந் தாள். அவள் தானுகவே சொற்களின் பொருளை ஊகித்துப் புரிந்துகொண்டு பாடத்தைப் படித்துக்கொண்டு போய் விடுவாளென்று நினைக்கிறேன். என்னுடைய பாடம் ரொம்பச் சிறியது; வாத்தியார் சொல்வதைக் கேட்டுக் கொண்டு, புரிந்தாலும் புரியாவிட்டாலும் பேசாமல் இருந்துவிடுவேன். சாவித்திரியின் பாடம் வரும்பொழுது வாத்தியார் பாடு சிரமம். அவளுக்குச் சந்தேகங்கள் தோன்றிவிடும். விளக்கிச் சொல்லும்படி கேட்பாள். அவர் ஏதேதோ சொல்லி விளங்கச் செய்வதற்கு முயல் வார். இதற்குச் சரியாக எங்கள் தந்தை ஸ்நானத்தை முடித்துக்கொண்டு சந்தி பண்ணவென்று அங்கு வந்து சேருவார்.

"நீங்கள் சொல்வது அவளுக்குப் புரியவில்லையே! இப்படியல்லவா பொருள் கூறவேண்டும்?" என்று தாமே விளக்கம் செய்யத் தொடங்கிவிடுவார். பிறகு பாடத்தின் நேரமும் நீண்டுகொண்டு போகும்; வாத்தியாரின் கற்பிக்கும் திறனும் வெளிப்பட்டுவிடும். அதனல் அவருக்குச் சாவித்திரியின்மேல் கோபந்தான் வரும். 'ஜெஷ்டை' என்று வைவார். அது வைஷ்ண வர்கள் உபயோகிக்கும் சொல்போலும்! அவர் வீர வைஷ்ணவர் என்று நினைக்கிறேன். காவியங்களில் ஈசுவரனைப்பற்றி வரும் இடங்களில் 'அவன், இவன்' என்று ஏகவசனத்தில் சொல்லுவார். விஷ்ணுவைப் பற்றியாளுல் பெருமாள், அவர், இவர் என்று மரியா தைச் சொற்களை உபயோகிப்பார். "ஈசுவராதிகள் எல் லோரும் ஒன்றல்லவா? எதற்கு இந்த வித்தியாசம்?" என்று சாவித்திரி அவருடன் வாதாடுவாள். அவருக்கு ஸம்ஸ்கிருத கவிகளில், பவபூதி என்ருல் ஒரு பக்ஷபாதம். அவரை உயர்த்தியும், காளிதாசரைக் குறைத்தும் பேசு வார். சாவித்திரி விடமாட்டாள். தனக்குத் தெரிந்தமட்டில்

காளிதாசர் உயர்த்தி என்று தர்க்கம் செய்வாள். இவ்விதம் அவள் பாடம் கற்றுக்கொள்ளும் விதமே வேறு. கற்றுக் கொண்ட வரைக்கும் அவளுக்குத் தெளிவாகவும் சந்தேக மின்றியும் இருக்கும்.

என்னைப்பற்றிக் குறைத்துத்தான் சொல்லிக்கொள்ள வேண்டும். சுப்பலத்தைப் போலக் கிரகித்துக் கொள் வதில் வேகமும் எனக்கு இல்லை. சாவித்திரியைப் போலத் தெளியத் தெரிந்துகொள்வதும் என்னிடத்தில் இல்லை. மொத்தத்தில் நான் படித்ததே வெகு குறைவு. சிறுவயதில் அடிக்கடி காய்ச்சலில் படுத்துவிடுவேன்; அதனால் என்னைச் சிரமப்படுத்திப் படிக்கும்படி செய்ய யாரும் விரும்பவில்லை. எனக்காகவும் ஒன்றிலும் ஒரு விசேஷத் திறமையும் இருக்கவில்லை.

எங்கள் தம்பி அப்பு என்னைப் போல அல்ல; வெகு புத்திசாலியாக இருப்பான். நாங்கள் பாடுவதைக் கேட்டே வெகு நன்ருகப் பாடுவான். அவன் நந்தன் சரித்திரக் கீர்த்தனைகளைப் பாடினால் எங்கள் தந்தை அப் படியே பரவசப்பட்டுப் போவார். கோபாலகிருஷ்ண பாரதி யாரின் நந்தன் சரித்திரக் கீர்த்தனங்கள் அவருக்கு மிகவும் பிடித்தவை. எளிய தமிழில் பெரிய வேதாந்தக் கருத்தைப் புகுத்தியிருக்கும் அழகைப் பெரிதும் வியந்து போற்றுவார். அப்பு அவற்றை இனிய குரலில் ஒரு வார்த்தை பிசகாமல் பாடும்பொழுது மனத்திற்கு மிகவும் ஆனந்தமாகத்தான் இருக்கும். படங்கள் தீட்டுவதிலும் அவனுக்கு ஒரு ருசி இருந்தது. சுருங்கச் சொன்னால் நளின கலைகள் என்கிருர்களே அவை எல்லாவற்றிலும் அவனுக்கு ரசிக உணர்ச்சி தனியாக அமைந்திருக்கத் தான் இருந்தது. அவனிடத்தில் அவை இன்றும் விசேஷ மாகப் பிரகாசிக்கின்றன.

அக்காலத்தில் எங்கள் இல்லம் ஒரு பல்கலைக் கழக மாகத் திகழ்ந்தது என்று சொல்வது தவருகாது. எங்கள் தந்தை ஆங்கிலம், ஸம்ஸ்கிருதம், தமிழ் இம்மூன்று

பாஷைகளிலும் மிகவும் பற்றுக் கொண்டவர். அவற்றில் அவருக்கு ஓரளவு சிறந்த அறிவும் உண்டு. மூன்று பாஷைகளிலுமுள்ள உயர்ந்த புத்தகங்களைப் படித்து அவற்றிலுள்ள விசேஷங்களை யெல்லாம் ஒருவாறு நன்கு உணர்ந்திருந்தார். ஆகையால் எங்கள் வீட்டிற்கு அந்தப் பாஷைகளில் தேர்ச்சி பெற்ற பல வித்துவான்கள் விஜயம் செய்து அவருடன் பல சர்ச்சைகள் செய்து போவார்கள். அது மட்டுமல்ல; எங்கள் தந்தைக்குக் கலைப்பற்றுக் கொண்ட பல நண்பர்களும் உண்டு.

அவர்களில் முக்கியமானவர், ராவ்பகதூர் ஏ. கிருஷ்ணசாமி ஐயர் என்பவர். அவரை ஒரு கர்மயோகி என்று சொன்னாலும் தகும். அவர் உதவிப் போலீஸ் கமிஷனர் உத்தியோகத்தைத் திறமையுடன் பார்த்தவர். ஆனால் அவர் சாந்த சொருபத்தைப் பார்ப்பவர் யாரும், அதிகார தோரணையோடு கூடின போலீஸ் வேலை பார்த்தவரா இவர் என்று அதிசயப்பட்டுப் போவார்கள். வெகு நேர்மையானவர்; பரோபகாரமே விரதமாகக் கொண்டவர்; எங்கள் தந்தைக்குப் பரம ஆப்தர்; எங்களிடத்தில் தந்தைக்கும் மேலான பிரியத்தை வைத்தவர். அவர் ஒழிவு நேரங்களில் வேதாந்தம், ஆயுர்வேதம் என்றெல்லாம் நம் சாஸ்திரங்கள் பலவற்றையும் படித்திருக்கிறார். அவர் யோகாப்பியாசங்கூடச் செய்து பார்த்திருக்கிறார் என்று சொல்வதுண்டு. பிற்காலத்தில் அவரைத்தான் எங்கள் தந்தை ஆயுர்வேத வைத்திய சாலைக்கும் ஸம்ஸ்கிருதப் பாடசாலைக்கும் கௌரவக் காப்பாளராக நியமித்தார். அவற்றுக்கு வளர்ப்புத் தந்தை என்று அவரைக் கூறுவார்கள்; அவ்விதம் அவற்றைக் கண்ணும் கருத்துமாகப் பார்த்தார் என்பதற்காக.

இவரைப் போன்ற நண்பர்களும் அப்பொழுது அந்தப் பேச்சுக்களில் கலந்துகொள்வார்கள். இவ்விதம் எங்கள் தந்தை பல விஷயங்களை ஆராய்ந்ததாலேயே ஸம்ஸ்கிருத பாஷையில் பொதிந்து கிடக்கும் பொக்கிஷங்

களைத் தெரிந்துகொண்டார் என்று நினைக்கிறேன். அந்த மொழி நம்மை விட்டு மறைந்து விட்டால் நமக்குச் சொந்தமான மகத்தான ஆஸ்தியை நாம் இழந்துவிடுவோம் என்கிறதையும் அவர் உணர்ந்தார். அதற்காகத்தான் ஸம்ஸ்கிருதக் கலாசாலையை ஏற் படுத்தி, அந்தப் படிப்புக்கு ஒரு மகத்துவம் கொடுக்க வேண்டிச் சிரோமணிப் பட்டத்தையும் அதற்குச் சம்பா தித்து வைத்தார் என்று சொல்லவேண்டும். அவர் ஒவ் வொரு நற்காரியத்தையும் எப்படி எப்படி நினைத்து, எப்படி எப்படிச் செய்தார் என்பதை இங்கே நான் சொல்லப்போவ தில்லை. எனக்கு முழு விவரமும் தெரியவும் தெரியாது. தெரிந்துகொள்ள அப்பொழுது வயசு போதாது. பிறகு யார் அவற்றைப் பற்றி நினைத்தார்கள்? ஷேக்ஸ்பியரும் காளிதாசரும் கம்பரும் வால்மீகியும் உறவாடின இல்லம் என்று ஒரு பெரியார் எங்கள் கிருகத்தைப் பற்றிச் சொன்னார். அது மிகவும் உண்மை. அந்தச் சூழ்நிலையில் வளர்ந்த எங்களுக்கு அந்தக் கல்வி வாசனை ஓரளவு ரத்தத்தில் ஊறி இருக்கக்கூடும்; அல்லவா?

# எழுத்தார்வமும் பாராட்டும்

என் சகோதரிகள் சுப்பலமும் சாவித்திரியும் பத்துப் பன்னிரண்டு வயதிலிருந்தே கதைகளும் கட்டுரைகளும் எழுத மிகவும் ஆசைப்படுவார்கள். தமிழில் நாவல்களும் நாடகங்களும் மாதப் பத்திரிகைகளும் வரத் தொடங்கியிருந்த காலம் அது. அவர்கள் பிரதாப முதலியார் சரித்திரம், கமலாம்பாள் சரித்திரம், பத்மாவதி சரித்திரம் ஆகியவற்றையும் நடேச சாஸ்திரி எழுதின திக்கற்ற இரு குழந்தைகள் போன்ற பல நாவல்களையும் ஓயாது படிப்பார்கள். எனக்கும் வாசித்துக்

காண்பிப்பார்கள். நான் அவற்றை வெகு சுவாரசியத்துடன் ரசித்துக் கேட்பேன். இரவில் படுக்கையில் படுத்த பின்கூட எனக்கு அந்தக் கதாபாத்திரங்களின் நினைவாகவே இருக்கும். அவர்களைப்பற்றி எண்ணமிட்டுக்கொண்டேதான் தூங்குவேன். இவ்விதம் ஓயாது படித்ததனால் தாங்களும் எழுதவேண்டும் என்ற ஆசை என் சகோதரிகளுக்கு உண்டாகிவிட்டது போலும். ஆயிரம் பாட்டிற்கு அடி என்பார்களே, அதுபோல எவ்வளவோ நாவல் ஆரம்பித்து முடிவு பெறுமல் அவர்கள் மேஜை டிராயரை நிரப்பி இருந்திருக்கின்றன.

ஏதோ ஒரு கருத்துத் தோன்றிவிடும்; அந்த உற்சாகத்தில் ஆரம்பித்துவிடுவார்கள். அப்புறம் மேலே தொடர்ந்து கதையைக் கொண்டு செல்வது எப்படி என்று தெரியாமல் போய்விடும். அவ்வளவுதான்; அதோடு அந்த நாவல் நின்று போக வேண்டியதுதான். சில சமயம் அவர்கள் எழுதினதைத் திரும்பப் படித்துப் பார்க்கும்பொழுது, சம்பவங்களும் - ஏன், வாசகங்கள்கூட-அவர்கள் படித்து உயர்வாக நினைத்த புத்தகங்கள் போலவே இருந்துவிடுவதுண்டு. எதுவாைலும் அவர்கள் அலுக்காமல் சலிக்காமல் எழுதுவார்கள்.

அவரவர்கள் எழுதினதை என்னிடம் தனித்தனியே படித்துக் காண்பிப்பார்கள். எனக்கு என்னவோ அவை பிரமாதமாகத்தான் தோன்றும். பெரிய ஆசிரியர்களைப் போல எப்படித்தான் அவர்கள் எழுதுகிறார்கள் என்று ஆச்சரியப் படுவேன். அதை அப்படியே அவர்களிடம் சொல்லவும் சொல்வேன். என் அபிப்பிராயத்தில் அவர்களும் திருப்தி கொண்டு விடுவார்கள். வேறு தெரிந்தவர்களிடம் காட்டித் தங்கள் திறமைக்குப் பாராட்டுப் பெற வேண்டுமென்று அவர்கள் நினைத்ததில்லை. அதற்கு முற்றும் மாருக ரகசியமாக மறைத்து மறைத்துத்தான் எழுதுவார்கள். நான் அப்போது நினைத்தது மட்டுமல்ல; உண்மையிலேயே அவை

ஓரளவுக்கு நன்ருக இருந்திருக்கவேண்டும் என்றுதான் இப்போதும் நினைக்கிறேன்.

ஒரு சமயம் எங்கள் பெரிய தந்தை (அது எவ்விதம் நேர்ந்தது என்பது என் நினைவில் இல்லை), அவர்களின் எழுத்துக்கள் சிலவற்றைப் பார்க்க நேர்ந்தது. அவர் அவற்றைப் படித்துவிட்டு, "ஆகா! அற்புதம்!" என்று சொன்னதோடு நிறுத்திக்கொள்ளாமல் அவற்றை அச்சிடவேண்டுமென்றுகூட அபிப்பிராயப்பட்டார். தமக்கு வைத்தியம் பார்த்துக்கொண்டிருந்த நஞ்சுண்ட ராவ் என்பவரிடம் அவற்றைப்பற்றிப் பெரிதாகக் கூறிக்கொண்டிருந்ததை நான் எவ்வளவோ தடவை கேட்டிருக்கிறேன்.

நஞ்சுண்ட ராவ் வெறும் டாக்டரல்ல; நன்ருகப் படித்த ரசிகர். எவ்வளவோ விஷயங்களில் சிரத்தை கொண்டு நடத்துபவருங்கூட. அவர் எங்கள் குடும்ப வைத்தியர். அப்பொழுது எங்கள் பெரிய தந்தைக்கு அவர் வைத்தியம் செய்துகொண்டிருந்தார். எங்கள் பெரிய தந்தை க்ஷயரோகம் என்னும் கொடிய நோயினுல் பீடிக்கப்பட்டிருந்தார். ஜில்லா ஜட்ஜ் வேலையினின்றும் ஓய்வு பெற்றுக்கொண்டு எங்கள் கிருகத்தில் வந்து இருந்து வைத்தியம் செய்துகொண்டிருந்தார். அந்த நோய் அவருக்குத் தீராத நோயாக ஏற்பட்டுவிட்டது. சில மாதங்கள் காய்ச்சலோடு படுத்திருந்து பிறகு இறந்து போனுர். எங்கள் தந்தை பணத்தைப் பணம் என்று பாராமல் செலவு செய்து தமையனுருக்கு வைத்தியம் செய்தார். ஒன்றும் பலிக்கவில்லை. அது 1908-ஆம் வருஷம்; எங்கள் தந்தை காங்கிரஸ் மகாநாட்டைத் தம் பொறுப்பில் ஏற்றுச் சென்னையில் நடத்தின சமயம் என்று நினைக்கிறேன். வீட்டிலோ தமையனுர் படுத்துக் கிடக்கிருர். வெளியிலோ மகாநாட்டின் வேலை. அவருக்கு மூச்சுவிட நேரமில்லை. அவர்கள் தம்பி சந்திரசூடன், இளமையிலிருந்து மிகுந்த பொறுப்பும், குலத்திற்கு ஏற்ற உதார உணர்ச்சியும் பெற்றவன். தமைய

ஞரைக் கவனிக்கும் பொறுப்பில் அவனை விட்டுவிட்டு, தாம் காங்கிரஸ் வேலையைக் கவனித்தார். அது ஒவ்வொரு வேளையில் எங்கள் பெரிய தகப்பனுருக்கு மனத் தாங்கலாக இருந்தது. "கிருஷ்ணன் காங்கிரஸில் இருப்பான். நான் இங்கே செத்துக் கிடப்பேன்" என்று வியாதியின் கொடுமையால் கடுமையாகச் சொல்லிக் கொள்வாராம்.

மற்றப்படி அவர்களை ராம லக்ஷ்மணர்கள் என்று தான் சொல்லுவார்கள். ஒருவருக்கு ஒருவர் அவ்வளவு பிரியம். "நீ எனக்கு ஒரு தம்பி இப்படிச் செய்கிருய். உனக்கு யார் இதுபோலச் செய்வார்கள்?" என்று வருத்தப்பட்டுக் கொள்வாராம். அவர் ஆபத்சந்நியாசம் வாங்கிக்கொண்டு காஷாய உடையில் கம்பீரமாகச் சாய்ந்து படுத்திருந்தது இன்றும் என் நினைவில் இருக்கிறது. அவரைச் சுற்றி ஒரே கோஷமாக மந்திரங்கள் ஜபித்துக்கொண் டிருந்தார்கள். அவரும் நாராயண, நாராயண என்று பகவந்நாமாவை அப்பொழுதப்பொழுது உச்சரித்துக்கொண் டிருந்தார். அவர் நினைவு தடுமாறிக் கொண் டிருந்தது அப்பொழுது. சுற்றி அவர்கள் சொல்லும் உபநிஷத் வாக்கியங்களில் ஏதாவது தவறு இருந்தால் 'உம்' என்று குரல் கொடுத்துத் திருத்திக்கொள்ளச் செய்தாராம். அவ்வளவுக்கு அந்த நிலையிலும் அவருக்கு அந்தப் படிப்பு உணர்வு இருந்திருக்கிறது. தம்மைக் காட்டிலும் தம் தமையனர் புத்திமான், படித்தவர் என்றெல்லாம் எங்கள் தந்தை அவரை உயர்வாகக் கூற நாங்கள் கேட்டிருக்கிறோம்.

எங்கள் தந்தைதான் தமையனரைச் சந்நியாசம் வாங்கிக்கொள்ளச் செய்தவர். தமையனர் இனிப் பிழைக்கமாட்டார் என்று தெரியவே அவரிடம் தனிமையில், "நீ இனிப் பிழைக்க மாட்டாய்; சந்நியாசம் வாங்கிக்கொள்ளுகிருயா? செய்து வைக்கிறேன்" என்று கேட்டாராம்.

"நான் அதற்கு அருகனா?" என்று அவர் பதிலுக்குக் கேட்டார்.

"உனக்கு அருகதை இல்லை யென்றால் வேறு யாருக்கு உண்டு?" என்று எங்கள் தந்தை அதற்கு விடை கூறியிருக்கிறார்.

"இரு, இரவு யோசித்துச் சொல்லுகிறேன்! இந்தச் சம்சார பந்தத்தை விலக்க முடிகிறதா, பார்க்கிறேன்" என்று சொன்னாராம், எங்கள் பெரிய தந்தை.

உலக பந்தத்தை அறவே ஒழிப்பதல்லவா சந்நியாசம்? இரவு முழுவதும் தூங்காமல் மனத்தைச் சோதித்துப் பார்த்திருக்கிறார். சந்நியாசத்தை ஏற்கக்கூடிய மனப்பக்குவம் ஏற்பட்டுவிட்டது என்று தெளிந்த பிறகே, காலையில் தம்பியிடம், சரி என்று சொல்லிவிட்டார். அவர் பிழைத்து எழுந்தால் எங்களுக்கு அவர் உறவு இல்லாமற் போகுமே என்கிறதை நினைத்து எல்லோரும் மிகவும் வருந்தினார்கள். அவருடைய கடைசி மகன் எனக்குச் சிறியவன்; அவன் அழும்பொழுது நானும் தாங்காது அழுதது என் நினைவில் இருக்கிறது. வீட்டில் எல்லோரும், மற்றும் வெளியிலிருந்து பலரும் வந்து அவரை நமஸ்கரித்துப் போனார்கள். அவ்விதம் எங்கள் தாயும் நமஸ்கரித்தபொழுதுதான் அவர், "நானும் போய்விடுவேன்; இவளும் முந்திக் கொண்டு விடுவாள்" என்று ஞானதிருஷ்டியினால் தெரிந்து கொண்டதுபோல, மறு வருஷம் நேரப்போகும் எங்கள் தாயின் மரணத்தைக் குறிப்பிட்டுச் சொன்னாராம்.

"அவரும் வக்கீல் தொழிலை மேற்கொண்டிருந்தால் எனக்கு மேல் சம்பாதித்திருப்பார்" என்று எங்கள் தந்தை அடிக்கடி சொல்லுவார். அவர் சம்பாதிக்க ஆரம்பிக்கு முன்னமே எங்கள் பாட்டனார் இறந்து மூத்த மகனான அவர்மேல் குடும்ப பாரம் விழுந்தது. சிறுவர்களான இரு தம்பிகள், சிறிய தாயார், மற்றும் மனைவி குழந்தைகள் இவ்விதம் பெரிய குடும்பம். எங்கள் தந்தை வேறு,

இனித்தான் சம்பாதிக்க வேண்டும். இவ்விதம் இருக்கும்பொழுது நிரந்தரமற்ற வக்கீல் தொழிலை நம்பி வாழ முடியுமா? அதற்காக அவர் முன்சீப் உத்தியோகத்தை ஏற்ருர். அதில் புகழ் பெற்று விளங்கினர். அவர் ராமாயண பாராயணம் செய்வதை இன்றெல்லாம் கேட்டுக்கொண் டிருக்கலாமாம்; அவ்வளவு தெளிவும் அழகும் கம்பீரமும் அந்த வாசிப்பிலே நிறைந்து கிடக்கும் என்று சொல்லுவார்கள்.

அவ்வளவு படித்த மேதை அவர். அவரே என் சகோதரிகள் எழுதியதைப் பாராட்டினர் என்ருல், அவை உண்மையிலேயே நன்ருக இருந்திருக்கவேண்டும் என்று தெரிகிறதல்லவா?

ஒரு சமயம் நாங்கள் நீலகிரியில் இருந்தபொழுது அப்பாவின் அத்தான் ராமசாமி, சாவித்திரியின் நாடோடிக் கதை ஒன்றைப் படித்துவிட்டு மிகவும் புகழ்ந்து கொண்டாடினர். அதைக் கேட்டுவிட்டு நான், "இதென்ன பெரிசு? சாவித்திரி நாவல் ஒன்று எழுதி யிருக்கிருள்; படித்துப் பார்க்க வேண்டும். அழுகை அழுகையாக வரும்" என்று சொன்னேன். அப்புறம் அவர் விடுவாரா? "அடே! உனக்கு அழுகை வரும்படி அவ்வளவு நன்ருக இருக்கிற நாவல் எது? கொண்டுவா, பார்ப்போம்" என்று என்னைப் பரிகசித்தவண்ணம் கேட்கத் தொடங்கிவிட்டார். அப்பாவிடங்கூட நான் சொன்னபடியே சொல்லிச் சிரித்தார். கதை எழுதின சாவித்திரிக்கு மேல் எனக்கு வெட்கமாகப் போய் விட்டது. பிறகு நாங்கள் யாராவது அதை அவரிடம் காண்பிப்போமா? தங்கள் திறமையைப் பலர் அறியச் செய்வதில்தானே எல்லோருக்கும் இஷ்டமாக இருக்கும்? நாங்கள் என்னவோ அப்படி இல்லை.

# ரிக்ஷாக்காரன் இட்ட கோடு

ஒன்று எங்களைப்பற்றி நான் சொல்லிக் கொள்ளத்தான் வேண்டும். எங்களுக்கு ஏதாவது தெரிந்ததோ, தெரியவில்லையோ, சூது வாது கொஞ்சமும் தெரியாது. குணத்தில் நாங்கள் வெள்ளையுள்ளத்தினராகவே இருந்தோம் என்று சொன்னாலும் மிகையாகாது. எங்களுக்குத் தனியாக ஒருவர் வேண்டியவர், ஒருவர் வேண்டாதவர் என்கிற வித்தியாசமே ஒருவரும் கற்று வைக்கவில்லை; எங்களுக்காகவும் தோன்றினதில்லை. எல்லோரிடத்திலும் சமமான மனோபாவத்துடன்

நாங்கள் பழகினேம். ஆனல் ஒன்று: பெரியவர்களுக்கு மரியாதை செய்யவேண்டும் என்பதை நாங்கள் தெரிந்து கொண்டிருந்தோம். அதை எங்கள் தாய் தான் நடந்து கொண்ட விதத்திலேயே எங்களுக்குக் கற்பித்து வைத்திருக்க வேண்டுமென்று நினைக்கிறேன். எங்கள் தந்தையோ எங்களுக்குத் தெய்வமாகவே தோன்றினர். அவருடைய அறிவும், குணமும், ஊரார் அவரிடம் காண்பித்த பெரு மரியாதையும் மதிப்பும் அவ்விதம் அவரை அண்ணாந்து பார்க்கச் செய்தன. ஈசுவரனுடைய சந்நிதியில் போல அவர் எதிரில் நாம் ஒரு தப்பும் செய்யக்கூடாது என்ற எண்ணந்தான் எங்களுக்கு மேலோங்கி நின்றது. அதற்கு ஒரு சிறு உதாரணம். சம்பவம் என்னவோ வெகு அற்பந்தான். ஆனலும் அது எங்கள் மனப்பான்மையைப் புரியச் செய்யுமென்று நினைக்கிறேன்.

அப்பொழுதெல்லாம் சுகுண விலாச சபாவில் நடு நடுவே நாடகங்கள் நடப்பதுண்டு. ஷேக்ஸ்பியரின் பிரசித்த நாடகங்களில் ஒன்றுன ஹாம்லெட் என்னும் நாடகத்தை அமலாதித்தியன் என்ற பெயரில் மொழி பெயர்த்திருந்தார், ப. சம்பந்த முதலியார். அவர் நாடகங் களை நாங்கள் எவ்வளவோ படித்திருக்கிறேம். தாம் எழுதியவற்றையெல்லாம் எங்கள் தந்தைக்கு அவர் அன்பளிப்பாகக் கொடுத்திருக்கிருர். அமலாதித்தியனும் நாங்கள் படித்து ரசித்த புத்தகந்தான். அன்று அந்த நாடகத்தை இரண்டாவது முறையாக நடித்துக்கொண் டிருந்தார்கள். என்னையும் சாவித்திரியையும் எங்கள் தந்தை அதற்கு அழைத்துப் போனர். புறப்படுவதற்கு முன், "நீ இதை முன்பே பார்த்திருக்கிருய், அல்லவா?" என்று சாவித்திரியைக் கேட்டார். அவள் பார்த்திருந் தால் என்னை மட்டும் அழைத்துப் போகலாம் என்கிற எண்ணம் அவருக்கு. சாவித்திரிக்குத் தான் பார்த்தது மறந்து போய்விட்டது; "இல்லை" என்று சொல்லி

விட்டாள். நாங்கள் புறப்பட்டுச் சென்றுவிட்டோம். நாடகம் தொடங்கவுமே, 'முன்பு பார்த்திருக்கிறோம்' என்பது அவள் நினைவிற்கு வந்துவிட்டது. அப்புறம் கேட்க வேண்டுமா? அவளுக்கு டிராமா பார்ப்பதாகவே இல்லை. மறுபடியும் பார்க்க வேண்டும் என்ற ஆசையில் பொய் கூறினதாக அப்பா தன்னை நினைப்பாரே என்கிற தவிப்பே மேலிட்டுவிட்டது. நாங்கள் எல்லோருமே அவ்விதந்தான். ஒரு தாழ்வான குணமும் எங்களிடத்தில் இருப்பதாக அவர் நினைக்கக்கூடாது என்றுதான் யாவரும் விரும்பினோம்.

சில விஷயங்களில் எங்கள் அறியாமை எப்படி இருந்தது என்பதையும் கொஞ்சம் சொல்லிவிடுகிறேன். எங்கள் வீட்டில் நிறைய ஆட்கள் இருந்தார்கள் அல்லவா? அவர்கள் எங்களைப் பல விதத்தில் ஆட்டி வைப்பார்கள். அதை வீட்டிலுள்ள பெரியவர்களிடம் சொல்லிக் கண்டிக்கும்படி செய்ய எங்களுக்குத் தோன்றினதில்லை. பூஜை வாத்தியார் பூஜைக்குப் புஷ்பம் எடுக்க, அக்ஷதை பொறுக்க இவற்றுக்கெல்லாம் எங்களை ஏவுவார். அவை நல்ல காரியங்கள்தாம் என்றாலும், நாங்கள் விளையாட்டு மோகத்தில் செய்யாவிட்டால் அதற்குப் பெரிதாகக் கோபிப்பார்.

நாங்கள் பள்ளி செல்ல எங்கள் வீட்டில் ஒரு ரிக்ஷா வண்டி உண்டு. அதைப் பங்களா வேலைக்காரன் கிருஷ்ணன் இழுத்துச் செல்வான். அவன் அல்லி அரசாணி, நல்லதங்காள், இது மாதிரி தெருக் கூத்துக்களில் வேஷம் போட்டு நடித்தவன். அவற்றில் வரும் பாட்டுக்களை எல்லாம் எங்களுக்குப் பாடிக் காட்டுவான். நாங்களும் பொறுமையுடன் ரசித்துக் கேட்போம். அவன் பள்ளிக்கூடத்திற்கு வண்டி இழுத்துச் செல்லும்பொழுதும் அந்தப் பாட்டுக்களைப் பாடிக்கொண்டு வெகு மெதுவாகத்தான் செல்வான். மாலை நாலு மணிக்குப் பள்ளிக்கூடம் முடிந்து பாட்டு ஸ்கூல் ஆரம்பமாகும். அதுவும்

அதே கட்டிடத்து மாடியில்தான். நான் பாட்டுப் பள்ளிக்கூடத்துக்கு மட்டுந்தான் போவேன், இரண்டிற்கும் செல்வது என் உடம்பிற்கு ஒத்துக்கொள்ளாது என்பதற்காக. சாவித்திரி இரண்டிலுமே படித்துக்கொண்டிருந்தாள். அவளுக்கு வீடு வந்து திரும்பவும் செல்ல நேரம் இல்லை என்பதற்கு வேண்டி, அவளுடைய பிடில் வாத்தியத்தையும் என்னுடையதையும் நான் எடுத்துச் செல்வேன்.

கிருஷ்ணன் என்னை உட்கார . வைத்து ரிக்ஷா இழுத்துச் செல்வான். எவ்வளவு மெதுவாகப் போக முடியுமோ அவ்வளவு மெதுவாகப் போவான். வழியில் மிட்டாய்க் கடைச் சந்து ஒன்று உண்டு. இப்பொழுதும் இருக்கிறது. அங்கு வரவும், மிட்டாய் வாங்கிச் சாப்பிடத்தானோ, வேறு எதற்கோ, பகவானுக்குத்தான் வெளிச்சம், "இதோ, வந்துட்டேன்" என்று சொல்லி, ரிக்ஷாவை நிமிர்த்திப் பின்பக்கத்துக் கம்பிகளில் தாங்கி நிற்கும்படி சாய்த்து வைத்துவிட்டுப் போய்விடுவான். எனக்கு முன்னே சாய நடுக்கம்; பின்னே சாய்வதற்கோ அதைவிட நடுக்கம். ஒரே மட்டில் ரிக்ஷா ஓரியடித்துக்கொண்டு விழுந்துவிட்டால் என்ன செய்வது என்கிற பயம். தாராளமாய் மூச்சு விடப் பயந்து மூச்சைப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்திருப்பேன். அவன் வருவதற்குள் எனக்கு யுகமாகத் தோன்றும். இது பாதி நாளும் நிகழும் நிகழ்ச்சி. அவனை அவ்வாறு போகக்கூடாது என்று சொல்லவோ, அப்படிப் போவதாக இருந்தாலும், "வண்டியைப் பின்னே சார்த்தி வைக்காதே; முன்னே தாழ்த்தி வைத்துவிட்டுப் போ" என்று சொல்வற்கோ எனக்கு முன்கூட்டித் தோன்றினதில்லை. வீட்டிலுள்ள பெரியவர்களிடம் இதைச் சொல்ல வேண்டும் என்றும் நான் நினைத்ததில்லை.

எனக்குத்தான் தெரியவில்லை என்ருல் சாவித்திரி மட்டும் என்னவாம்! அவளிடம் இதை நான் சொல்லும்பொழுது, "இப்படி ஒருத்தன் பண்ணுவனே?" என்பாளே தவிர, அதற்கு மேல் ஒன்றும் செய்யமாட்டாள். தெரிந்தால்தானே செய்ய?

மாடியில் நடக்கும் வகுப்புக்கு இடையில் ஒன்றும், கையில் ஒன்றுமாகப் பிடில் பெட்டிகளைத் தூக்கிக் கொண்டு பாவாடை தடுக்கி விழாத தோஷம், மாடி ஏறிச் செல்வேனே தவிர, ஆளைக் கொண்டு வந்து வைக்கச் சொன்னதில்லை. அவனுகவும் அதைச் செய்ய மாட்டான். வேறு எந்தச் சிறுவர்களாவது இவ்வாறு இருப்பார்களா? தாங்களே தண்டிக்கா விட்டாலும் வீட்டிலுள்ள பெரியவர்களிடம் முதல் காரியமாகச் சொல்லித் தண்டிக்கச் செய்ய மாட்டார்களா? எனக்குத்தான் தெரியவில்லையென்ருல், எனக்கு மூத்தவளான சாவித்திரியும் அதுபோலத்தானே ஒன்றும் தெரியாது இருந்திருக்கிருள்? எங்கள் அறியாமையை இன்று நினைத்தாலும் அவமானந்தான் ஏற்படுகிறது. தாகூர் பெரியார், தம்மைப் பற்றிச் சொல்லிக்கொள்ளும் பொழுது வேலையாளுக்குக் கட்டுப்பட்டு ஒரு கோட்டிற்குள் அவன் வந்து விடுவிக்கும்வரையும் தாம் நகராமல் நின்றதைச் சொல்லியிருக்கிருர். பெரிய மேதையான அவரே அவ்விதம் இருந்தார் என்பதைப் படிக்க ஒரு மனச் சமாதானம் ஏற்படுகிறது. அவ்விதம் சமாதானம் செய்துகொள்வது முழுவதும் தவறில்லை என்றும் நினைக்கிறேன்.

# பணத்தில் அலைந்தவர்

எங்கள் தாய் உயிருடன் இருந்தபொழுதே எங்கள் மாமன்மார்களும் சிறிய தந்தைகளும் உத்தியோகம் ஏற்றுத் தனிக் குடித்தனமாகச் சென்றுவிட்டார்கள். எங்கள் கடைசிச் சிற்றப்பா ராமசந்திரன் போலீஸ் உத்தியோகத்தில் வெளியூர் போய்விட்டார். அவருக்கு மூத்தவர் சந்திரசூடன் மட்டும் இந்தியன் பாங்கில் காஷியர் வேலை ஏற்றுச் சென்னையிலேயே தங்கினார். எங்கள் பாட்டி, அவர்களின் இளம் மனைவிகளுக்குத் துணைக்கு வேண்டி அவர்களுடன் சென்று வசிக்கலானாள்.

எங்கள் சிறிய தந்தை சந்திரசூடனைப் பற்றிச் சொல்ல வேண்டியது அவசியந்தான். சந்திரசூடன் எங்கள் கிருகத்தில் இருந்த வரையும் எங்கள் தந்தையின் பணப் பெட்டியை முழுக்க முழுக்க வைத்துக்கொண்டிருந்தவர். இப்பொழுது போலவா எத்தனை ஆயிரமானாலும் காகித நோட்டுக்களில் மடித்து வைத்துவிட? அப்பொழுதெல்லாம் ரூபாய் நாணயங்கள். கச்சேரியிலிருந்து வரும்பொழுது எங்கள் தந்தை ஒரு பெரிய கயிற்றுப் பை நிறையப் பணத்துடன் வருவார். கட்சிக்காரர்கள் வீட்டில் கொடுப்பது தவிரக் கச்சேரியிலும் கொண்டுவந்து கொடுப்பார்கள் என்று நினைக்கிறேன். அதை வாங்கிச் சந்திரசூடன் கைப்பெட்டி நிறையக் கலகலவென்று கொட்டுவார். சுமாராகப் பெரிய பெட்டிதான். அப்படியும் பெட்டி நிறைந்துவிடும். அதிலிருந்து எடுத்து எடுத்துச் செலவு செய்வார். மாதக் கடைசியில்தான் செலவழித்தது போக மீதம் இருப்பதை எண்ணிப் பாங்கியில் கட்டுவார்கள். தண்ணீரில் அலைவது போலப் பணத்தில் அலைந்தும் சந்திரசூடன் அதில் தமக்கென்று ஒரு காசும் தொட்டது கிடையாதாம். அவருடைய நேர்மை அப்படிப்பட்டது. அவருக்குத் தொழிலும் பணத்தில் அலையும் தொழிலாகவே ஏற்பட்டுவிட்டது. செய்யும் வேலைக்கு ஏற்பட்ட ஊதியத்தைப் பெறுவது தவிர அங்கும் அவர் ஒரு சல்லிக் காசும் கைநீட்டி வாங்கினவரல்ல. தமையன் குழந்தைகளான எங்களிடத்தில் மிகவும் அன்பு வைத்தவர். நாங்களும் அவரிடத்தில் வெகு விசுவாசத்துடனும் மரியாதையுடனும் இருப்போம். சின்ன ஐயர் என்று அவருக்குப் பெயர். ஆள் படை எல்லாருக்கும் அவரிடத்தில் தனி மதிப்பு. இவ்விதம் அவரவர்கள் தனித்தனியாகச் சென்று, பிறகு எங்கள் வீட்டில் பந்துக்கள் கூட்டம் குறைந்து போயிற்று. எங்கள் தாயும் சீக்கிரத்திலேயே இறந்து போய்விட்டாள்.

# தந்தையே தாயும் ஆனார்

எங்கள் தாயின் மரணத்திற்குப் பிறகு எங்கள் தந்தை எங்களிடம் எதற்காக இவ்வளவு அளவு கடந்த பிரியத்தைக் காண்பித்தார்? ஏன் கண்ணும் கருத்துமாக எங்களைக் கவனிக்கத் தொடங்கினார்? அவர் எங்களிடம் அவ்வளவு நெருங்கிப் பழகி அன்பும் ஆதரவும் காண்பித்ததனால் அல்லவா நாங்கள் பிற்பாடு அவர் மரணப் பிரிவினால் தாங்க முடியாத துயரத்தில் ஆழ்ந்து கரையேற வழி காணாது கலங்கித் தவித்தோம்? இன்றும் அந்தத் துக்கம் எங்கள் இருதயத்தில் கனிந்து எறிய

முடியாதபடி ஆழப் பதிந்து கிடக்கிறது. ஆம், நாங்கள் தாயை இழந்த பிறகு, அவர் எங்களுக்குத் தந்தை மட்டு மல்ல, தாயாகவும் ஆனுர் என்று சொன்னுல் போதுமா? போதாது என்றுதான் சொல்ல வேண்டும். ஏனெனில் ஒரு தாய்கூட அவ்வளவு கருத்தோடும் பரிவோடும் தன் மக்களைக் கவனித்திருப்பாளோ என்னவோ, சந்தேகந் தான். அவர் அவ்விதம் எங்கள் சம்பந்தமான அற்ப விஷயங்களில்கூடத் தம் கவனத்தைச் செலுத்திஞர். இவ்வளவு நாளும் வக்கீல் தொழிலில் எங்களை அதிகம் கவனிக்க முடியாததற்கு ஈடுசெய்ய நினைத்தார்போலும். நாங்கள் உண்பது, உடுப்பது, உறங்குவது எல்லாவற்றி லும் அவர் கவனம் சென்றது.

எங்கள் தமக்கை பாலம் தாயை நினைத்து வருந்திக் கொண்டு பாதி நாளும் இரவு சாப்பிடாமல் படுத்து விடுவாள். எங்கள் தந்தை அதை எதிர்பார்த்துத் தாஞே என்னவோ, தாம் உணவருந்தச் செல்லும் பொழுது தவருமல் எங்கள் படுக்கையறையுள் நுழைந்து அவள் சாப்பிட்டாளா என்பதை விசாரித்து, "பாலம், பாலம்" என்று அவளை அருமையாகக் கூப்பிட்டு அழைத்துச் செல்வார். பாலம் அவர் அழைப்புக்கு உடனே எழுந்துவிட மாட்டாள். அவர் பல முறை கூப்பிட வேண்டித்தான் இருக்கும். அப்பாவிடம் இவ் வளவு முரண்டு பிடிக்கிருளே என்று எங்களுக்கு அச்சமும் ஆச்சரியமுமாக இருக்கும். ஆனுல் அவர் அதற்குத் துளியும் கோபித்தது கிடையாது. அவள் வருத்தத்தின் ஆழத்தை அவர் அறிந்திருந்தார் அல்லவா? அவள் தனக்காக மட்டுமல்ல; நாங்கள் சிறுவர்கள் தாயை இழந்து சிறுமைப்பட்டுவிட்டதாக வேறு வருத்தப் பட்டாள். எங்கள் தந்தை இரவு உணவருந்தச் செல் வதற்கு மணி ஒன்பது, பத்து என்று ஆகிவிடும். அது பாலத்திற்கு அவரிடமே கோபத்தை உண்டுபண்ணும். இரவு நாழிகை கழித்து உண்பது அவர் உடல்

நிலையைப் பாதிக்காதா என்கிற கவலை அவளுக்கு.

யார் யாரோ அவரைப் பார்க்க வந்திருப்பார்கள். அவர்களுடன் பேசி முடித்து எழ அவருக்கு நேரமாகி விடும். சிலர் அவருடன் கூடவே இருந்து உணவருந்தி விட்டுச் செல்வார்கள். மாலை நேரம் அவர் கச்சேரி அலுவல்கள் நீங்கி இதர விஷயங்களில் செலவிடும் நேரம் என்பது எல்லோருக்கும் தெரியும். அதனால்தான் பலர் வந்து அப்பொழுது அவரைப் பார்ப்பார்கள். அதுபோலத்தான் ஒரு சமயம் ஜீ. ஏ. நடேசன் என்கிற நண்பர், பாரதியாரை எங்கள் தந்தையினிடம், இன்னாரென்று தெரிவியாமலே அழைத்து வந்தார். எங்கள் தந்தை அக்காலத்தில் மிதவாதக் கட்சியைச் சேர்ந்தவர். தீவிரவாதத்தை ஒப்புக்கொள்ளாதவர். தேசீய கவி சுப்பிரமணிய பாரதியார் பெரிய தீவிரவாதி அல்லவா? அப்படியிருந்தும் பாரதியாரின் தேசீய கீதங்கள் சிலவற்றைக் கேட்டு அவர் அதில் ஈடுபட்டுப் போனார். பணமின்றிச் சிரமப்பட்டுக்கொண்டிருந்த பாரதியாருக்கு உடனே வேண்டிய பண உதவி செய்து, பாட்டுக்கள் சிலவற்றை அச்சிடவும் செய்தார். அது மட்டுமா? சில பள்ளிக் கூடச் சிறுவர்களைக் கூட்டி எங்கள் கிருகத்து வெளி விடுதியில் (out-house) அவற்றை அவர்கள் கற்றுக் கொள்ளச் செய்தது என் நினைவில் இருக்கிறது. எதிரியானாலும் அவரிடத்திலுள்ள உயர்வைக் கொண்டாடும் அவருடைய சிறந்த குணத்தைத் தெரிந்துதான் நடேசன் பாரதியாரைத் துணிந்து அழைத்து வந்து நன்மையும் அடையச் செய்துவிட்டார். அந்த நடேசனிடத்திலேயே, நினைத்த காரியத்தைச் சாமர்த்தியமாகச் சாதித்துக் கொள்ளும் திறமையைக் கண்டுதான் எங்கள் தந்தைக்கு மதிப்பும் பிரியமும் என்று சொல்லுவார்கள்.

ஒரு சமயம், எங்கள் தமக்கைகள் பாலமும் சுப்பலமும் மதுரைச் சுங்கடிச் சேலை - சொற்ப விலையுள்ளது.

புள்ளிகள்கூட இல்லாத வெறும் கறுப்பு - அதை நன்ருக இருப்பதாக நினைத்து வாங்கியிருக்கிருர்கள். முதல் முறையாக அவர்கள் அதை உடுத்திருந்ததைப் பார்க்க வுமே, எங்கள் தந்தை, "இதென்ன புடைவை? இதை எதற்காக நீங்கள் கட்டுகிறது? கூடாது" என்று சொல்லி விட்டார். அவர் கண்ணுக்கு அந்தச் சுத்தக் கறுப்பு நூல் சேலே அருவருப்பு அளிப்பதாக இருந்திருக்கிறது. நாங்கள் நல்லதாக உடுத்து நேராக இருப்பதைத்தான் அவர் விரும்பினுர். எங்கள் தாய் போன பிறகு தாமே பெட்டியைத் திறந்து பார்த்து, எங்களுக்கு இருக்கும் நகைகள் போதா என்று நினைத்து நல்ல சீமைக் கமலத் தில் அட்டிகைகளும், பாலத்திற்கென்று வளைகளும் நல்முத்து மாலையும் செய்தார். ஒரேயடியில் ஆயிரக் கணக்கில் செலவிடுகிருரே என்று பாலத்திற்குத்தான் மனசு ஆகவில்லையாம். இப்பொழுதுகூடச் சொல்லு வாள், அவள் திரும்பத் திரும்பச் சொல்லித் தடுத்திரா விட்டால் அவர் இன்னுங்கூடச் செய்திருப்பாரென்று.

பெண்களுக்கு அணிகள் அவசியம். அவை அவர்க ளது சொந்தச் சொத்து. வேருெருவருக்கு அவற்றில் உரிமை கிடையாது. அவர்கள் இஷ்டம்போல அவற்றை உபயோகிக்கலாம். சமயம் நேர்ந்தால் அவை அவர் களுக்குப் பெரும் ஆதரவு அளிக்கும் என்றெல்லாம் அவர் எண்ணம். இப்பொழுது போலப் பெண்களுக் குச் சொத்து உரிமை ஏற்பட்டிருந்ததா அந்த நாளில்? அதற்கு முற்றும் மாருக எல்லாம் ஏக குடும்பம். குடும் பத்தில் எல்லாரும் மனம் வைத்தால்தான் பெண்களுக் குச் செய்வதென்பது சாத்தியம். அவ்விதம் இல்லே யென்ருல் எதற்கும் பிறர் கையை எதிர்பார்த்து வாழ வேண்டியவள்தான் பெண். ஆகையினுல் பெண்களுக்கு அலங்காரத்திற்கு மட்டுமல்ல; ஆஸ்திக்காகவும் ஏற் பட்டது நகை என்கிறது அவர் அபிப்பிராயம்.

# கோடைக்கானலில்

அந்த வருஷம் கோடை விடுமுறைக்கு நாங்கள் கோடைக்கானலுக்குப் போனோம். குட்டிக்கும் நாய்க்கும் குடிபோகச் சந்தோஷம் என்றல்லவா சொல்லு வார்கள்? அது முற்றும் சரி. எங்களுக்கு ஒரே குதூகலம். நாங்கள் அடிக்கடி ஊர்களுக்குச் சென்றதில்லை. ஒன் றிரண்டு முறை குன்னூர், ஊட்டி என்று போயிருக்கிறோம். அது நாங்கள் ரொம்பச் சிறுவர்களாக இருந்தபொழுது என்று நினைக்கிறேன். அது எங்கள் நினைவில் இல்லை. எங்கள் பங்களாவிற்கு எதிரில் பி. ஆர். சுந்தரையர்

என்பவர் பங்களா கட்டிக்கொண்டு வசித்தார். அவரையும் எங்கள் தந்தையையும் இரட்டையர்கள் என்று கூடச் சொல்லுவார்கள். இருவருக்கும் வேறு வேறு ஊர்தான். இருந்தாலும் அவர்கள் ஒன்ருகக் கலாசாலையில் படித்து, ஒன்ருக வக்கீல் தொழில் ஏற்று, ஒன்ருக வேலை பழகி, ஒன்ருக முன்னுக்கு வந்தவர்கள். எதிர் எதிராகப் பங்களாவும் கட்டிக்கொண் டிருந்தார்கள். பரம ஆப்தர்கள். அவர் மலையாளத்தைச் சேர்ந்தவர். அவர்கள் வீட்டில் தவருது கோடைக்குத் தமது ஊர் செல்வார்கள்.

அவர்களுடைய வீட்டுச் சிறுவர்கள் எங்களுக்குத் தோழர்கள். அவர்கள் ஊருக்குச் செல்வதைப் பெரிய விழாப்போலப் பெருமை அடித்துக்கொள்வதைக் கேட்க வேண்டுமே! புறப்படுவதற்குச் சில நாட்கள் முந்தியே அவர்கள் எங்களுடன் விளையாட வரமாட்டார்கள். நாங்கள் அவர்களைத் தேடிச் சென்ருலும், பெரியவர்கள் சாமான்கள் கட்டுமிடத்தில் சுற்றிக்கொண்டிருப்பார்களே தவிர எங்களைத் திரும்பியும் பார்க்க மாட்டார்கள். அப்பொழுது எங்களுக்கு ஏக்கமும் பொருமையும் தோன்றும். இப்பொழுது நாங்களும் அல்லவா ஊர் போகப் போகிருேம்? அதிலும் வெறும் ஊரல்ல; கோடைக்கானலுக்கு; அவ்விடத்தில் எங்கள் தந்தை வாங்கியிருக்கும் பெரிய பங்களாவுக்கு! கேட்க வேண்டுமா எங்கள் சந்தோஷத்திற்கும் பெருமைக்கும்?

ஆனல் எங்கள் எதிர் வீட்டுத் தோழர்களைப் போலப் பெருமை சொல்லிக் கொள்ள எங்களுக்குத் தெரியவில்லை. அப்படி நாங்கள் சொல்லிக் கொண்டாலும் பிறர் உயர்வை நாங்கள் வாய் திறந்து கேட்பது போல, அவர்கள் கேட்கவும் மாட்டார்கள். எப்போதும் கேட்கிறவர்கள் உண்டானல்தான் சொல்லுகிறவர்களுக்கும் உற்சாகம் ஏற்படும்; இல்லையா? அப்பொழுது மலைமேல் ஏறிச் செல்ல, பஸ் கிடையாது. அவ்வளவுக்கு விஸ்தாரமான ரஸ்தாவே இல்லை. ஆட்கள்தாம் டோலி

யில் தூக்கிச் செல்வார்கள். அங்கு நம்மையே நாம் உயிரோடு பாடையிலே பார்த்துவிடலாம். அப்படித் தான் இருக்கும். ,இரண்டு மூங்கில்களின் நடுவில் கித்தானைக் கோத்து நாலு பேராகத் தூக்கிச் செல் வார்கள். அப்புவையும் என்னையும் ஒரு டோலியில் ஏற்றியிருந்தார்கள். டோலி தூக்குபவர்கள் திடீரென்று ஒரு மாதிரி பாட்டுப் பாட ஆரம்பிக்கவும் எனக்கும் அப்புவுக்கும் சிரிப்புத் தாங்காது வந்துவிட்டது. அவர்கள் கோபித்துக் கொள்வார்களோ என்ற பயம். ஆனாலும் சிரிப்பை அடக்கச் செய்யும் முயற்சியில் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துப் பின்னும் சிரிப்புத்தான் வந்தது.

அடே அப்பா! கோடைக்கானல்தான் எத்தனை அழகு! எவ்வளவு குளிர்! நான், 'கோடைக்கானல் மலை என்றால் ஏதோ உயர்ந்து ஆகாசத்தை எட்டி நிற்கும். அதன் உச்சியில் விழுந்துவிடாமல் நாம் எப்படி இருக் கிறது?' என்று நினைத்து உள்ளுக்குள்ளே பயந்து இருந்தேன். வந்து பார்த்த பிறகல்லவா தெரிகிறது? மலைகளின் நடுவில் ஓர் ஊரே அமைந்திருக்கிறது. நட்ட நடுவில் அழகான பெரிய ஏரியும், அதைச் சுற்றிலும் மேலும் கீழுமாக ரோடுகளும் வீடுகளும் இன்றைக் கெல்லாம் பார்த்துக்கொண் டிருக்கலாம் போலிருந்தன. 'இதுவா கோடைக்கானல் மலை?' என்று எனக்கு ஆச்சரி யந்தான் அப்பொழுது ஏற்பட்டது. எங்கள் வீட்டிற்கு 'மேரு' என்று பெயர். அது அந்த ஊருக்கே உயர்ந்த இடத்தில் இருக்கிறது என்று அதற்கு அந்தப் பெயராம். பெரிய வீடுங்கூட. எங்கும் நிறையப் புஷ்பச் செடிகள். ரோஜா புஷ்பத்திற்குத்தான் எவ்வளவு வித வர்ணங்கள்! அவை சடுதியில் வாடிவிடுவது இல்லை. ஆனால் வாசனைதான் இல்லை. அஸ்தமித்து விட்டால், என்ன கம்பளிச் சொக்காய்கள் அணிந்தாலும் குளிர் நடுக்கி எடுத்துவிடும். இரவு சாப்பிட்டுவிட்டுக் கை அலம்பு வதற்குள் பிராணனே போய்விடுகிற மாதிரி தோன்றும்.

கம்மென்று போர்வைக்குள் படுத்துவிட்டால் எழுந் திருக்க எங்களுக்கு மனமே வராது. காலையில் எங்கள் தந்தைதாம் எங்கள் படுக்கை அறை ஜன்னலின் படுதாக்களை விலக்கிச் சூரிய வெளிச்சம் கண்ணாடி வழியாக உள் நுழையும்படி செய்வார். ''எழுந்திருங்கோடி பெண்காள்'' என்று விளையாட்டாகப் பாடவும் பாடுவார். நாங்கள் வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்திருப்போம். காபி பலகாரம் சாப்பிட்டுவிட்டு அவருடன் நாங்களும் நடக்கச் செல்வோம்.

''சுடச்சுடப் போடப்போட, தோசை தின்ன ஆசை யாச்சுதே'' என்று அந்தக் காலை நேரத்தில் நாங்கள் தோசை தின்பதற்கும் அவர் ஒரு பாட்டு - அது அவரு டைய சொந்தக் கற்பனையோ, வேறு யார் பாடியாவது கேட்டதோ தெரியாது - சொல்லுவார். இதையெல்லாம் எதற்குச் சொல்லுகிறேன்? அவர் அவ்வளவு ஸகஜமாக வும் அவ்வளவு அன்புடனும் எங்களிடம் பழகிக் கொண்டார் என்பதற்குத்தான்.

எங்கள் ஒன்றுவிட்ட அத்தையின் மகள், அதாவது எங்கள் தந்தையின் சிறிய தாயாரின் பேத்தி, எங்கள் வீட்டில் அடிக்கடி வந்து எங்களுடன் வசிப்பாள். அவ ளுக்கு எங்களுடைய வயசுதான். அவள் தகப்பனார் சொற்பச் சம்பளக்காரர். அவருக்கு ஐந்து பெண்கள். ஐந்து பெண் என்றால் அரசனும் ஆண்டி ஆவான் என்பது அல்லவா பழமொழி? ஆனால் அவர் அரசனல்லவே ஆண்டி ஆவதற்கு! எங்கள் சின்னப் பாட்டி தான் வரும் பொழுதெல்லாம் பேத்தியையும் உடன் அழைத்து வருவாள். மாதக் கணக்கில் எங்களிடத்தில் தங்கிவிட்டுப் போவாள். அப்பொழுதெல்லாம், நான், சாவித்திரி, ஞானி - அது அவள் பெயர் - மூவரும் ஒன்றாகவே இருப் போம். நாங்கள் போட்டி போட்டுக்கொண்டு கோலங்கள் போடுவோம். யார் நிறையப் புள்ளிகள் வைத்து, மணி மணியாக இழை இழுத்துக் கோலம் போடுகிறார்கள்

என்பதற்குத்தான் போட்டி. அடே அப்பா! எவ்வளவு கோலங்கள் போட்டிருக்கிறோம், தெரியுமா? இப்பொழுது அந்தக் கோலங்கள் எல்லாம் மறந்தே போய் விட்டனவே!

எங்கள் வீட்டுத் தோட்டத்தில் மகிழம்பூப் பூத்துக் குலுங்கிப் பாய் விரித்தது போல உதிர்ந்து கிடக்கும். அவற்றைப் பொறுக்கி மாலைகளாகக் கோப்போம். யார் நிறையப் புஷ்பங்கள் பொறுக்கிப் பெரிய மாலைகள் கோக்கிறார்கள் என்று பார்ப்பதில் ஓர் ஆசை, போட்டி, எல்லாம். கதைப் புத்தகங்கள் வாசிப்பதிலும் அவ்விதந் தான். யார் வேகமாகப் படித்து முடிக்கிறார்கள் என்று பரீட்சை பார்ப்போம். இந்தப் போட்டியில் படித்துத் தள்ளியிருக்கும் தமிழ் நாவல்களுக்குக் கணக்குத்தான் இருக்குமா? சாவித்திரிக்கும் ஞானிக்குந்தான் போட்டி அதிகம். நான் கொஞ்சம் சின்னவள். ஒவ்வொரு சொல் லுக்கும் ஒரு க என்கிற எழுத்தைச் சேர்த்து, க பாஷை என்கிறதாக ஒன்று பேசுவார்கள். அதை அவர்களைப் போல வேகமாகப் பேசுவதற்கோ பேசுவதைப் புரிந்து கொள்வதற்கோ எனக்கு வராது. அதை வைத்துக் கொண்டு, என் எதிரில் வேகமாய் அவர்கள் ஒருவருக்கு ஒருவர் பேசி என்னைத் திகைக்க அடிப்பார்கள். எனக்குத் தவிப்பாக இருக்கும்; அழுகைகூட வந்துவிடும்.

நாங்கள் கோடைக்கானலில் இருந்தபொழுது ஞானி, சாவித்திரிக்கும் எனக்கும் கடிதம் எழுதுவாள். ஒரு கடிதத்தில் 'என் அன்பின் களஞ்சியமே' என்று அழைத்துக் கடிதத்தை ஆரம்பித்திருந்தாள். ஏதோ கதைப் புத்தகத்தில் காதலர்கள் எழுதிக்கொண்ட சொற்கள் அவை. அது மிகவும் அழகான சொல் என்பதாக எண்ணம். தானும் உபயோகப்படுத்த வேண்டு மென்கிற ஆசை. யாருக்கு எழுதுவாள்? சாவித்திரிக்கு எழுதிவிட்டாள். தற்செயலாக அந்தக் கடிதம் எங்கள் தந்தையின் கண்களில் பட்டுவிட்டது. "அதென்னடி,

அன்பின் களஞ்சியம்! நீ என்ன எழுதப் போகிறாய், அன்பின் குதிரே என்று?'' என்று பரிகசித்துக் கேட்டார். சாவித்திரிக்கு ஒரே வெட்கம் மேலிட்டுவிட்டது. ஆமாம், களஞ்சியம் எனலாம்; குதிர் என்று சொல்லக் கூடாதா?

கோடைக்கானலில்தான் நாங்கள் சிங்களத்துப் பெரியாரான ஸர் எஸ். ராமநாதன் என்பவரைச் சந்தித்தோம். அன்று நாங்கள் ஏரியைச் சுற்றி நடந்து கொண் டிருந்தோம். எங்களுக்கு முன் சற்றுத் தூரத்தில் ராமநாதன் தம்பதிகள் போய்க்கொண் டிருந்தார்கள். ''அதோ போகிறாரே, அவர் சிங்களத்துக் கௌன்சில் மெம்பர். அவர் ஆங்கில மாதை மணந்துகொண் டிருக்கிறார். அவள் அவர் மனைவி'' என்று தந்தை சொல்லி விட்டார். பிறகு பார்க்க வேண்டுமே, எங்களுடைய பர பரப்பை! பாலம் உள்பட எல்லோருக்கும் அவளைப் பார்க்க ஆவல் மேலிட்டுவிட்டது. எங்கள் தந்தையும் எங்கள் ஆவலைப் புரிந்துகொண்டு தம் நடையை வேகப்படுத்தி, சற்று அவர்கள் கிட்டே நெருங்கவும், ''ஹலோ ராம நாதன்'' என்று குரல் கொடுத்தார். அவரும் திரும்பிப் பார்த்து, எங்கள் தந்தை என்று தெரிந்துகொண்டு, மனைவியுடன் எங்களை வந்து சேர்ந்துகொண்டார். ஆங்கில மாது என்றாலும், அவள் அவர்கள் ஜாதிக் கட்டுப்படி புடைவை உடுத்துப் பழைய காலத்துப் பொன் அட்டிகையை, அதன் பதக்கம் நெஞ்சுப் பள்ளத்தில் விழும்படி அளவாகப் போட்டிருந்ததைப் பார்க்க எங்களுக்கு அதிசயமாக இருந்தது. 'நாம்கூட அதைப் பழைய மோஸ்தர் என்பதற்காகத் தள்ளி விட்டோமே! இவள் பாவம், அணிந்திருக்கிறாளே!' என்கிற அதிசயந்தான்.

ராமநாதன், பாலத்திற்குத் தம் மனைவியை, ''இவள் தான் அம்மா என் பத்தினி; பெயர் லீலாவதி'' என்று அறிமுகப்படுத்தினார். அவரது இலக்கணமும், ராகம்

போட்டுப் பேசினதும் எங்களுக்கு விநோதமாகப் பட்டன. 'டிராமாவில் பேசுவது போல் அலலவா பேசுகிறார்?' என்று ஆச்சரியப்பட்டோம். அப்புறமெல்லாம், அப்பு அவர் பேசுவது போலப் பேசிக் காண்பிப்பான். எங்களுக்குச் சிரிப்புத் தாங்காது வரும். எங்கள் தந்தைகூடக் கடிந்துகொள்ள மாட்டார்; சிரித்துக்கொண்டே கேட்டிருப்பார்.

அப்புவுக்கே Mimicry என்கிறார்களே, அது நன்ருக வரும். தன்னோடு பழகுகிறவர்கள் யாராஞலும் அவர்களைப் போலப் பேசுவான். விஷயங்களும் சொற்களும் தத்ரூபம், அவர்களைப் போலவே இருக்கும். ஸரஸ்வதி பாயைப்போல நந்தன் சரித்திரம் முழுவதும் நடத்துவான். என்னைவிட மூன்றரை வயசு சிறியவன். ஆயினும் அவன் சொற்படி நான் கேட்டு நடப்பேன். நான் எங்கள் சிறிய தாயின் மகன் மஹாலிக்கோ ஞானிக்கோ கடிதம் எழுதினுல் அவன் எனக்கு எழுதச் சமாசாரங்கள் சொல்லுவான். ஆமாம்; ஒன்றும் இல்லை; 'மார்ஜால ப்ரஸவம்' என்று சுலபமாகச் சொல்வார்களே, அந்த விஷயந்தான் எங்களுடையது. உண்மையிலேயே நாங்கள் வரும்பொழுது எங்கள் வீட்டில் பூனை குட்டி போட்டிருந்தது. அவை பளபளவென்று கருமணி போன்ற கண்களுடன் வெகு அழகாக இருந்தன. 'நாங்கள் திரும்புவதற்குள் அந்தக் கண் பச்சையாக மாறி நடுவில் கோட்டுடன் வெகு விகாரமாகி விடாதா? ஏன் அப்படியே இருக்கக்கூடாது?' என்கிற எண்ணம் எங்களுக்கு. அதைப்பற்றி எல்லாம் எழுதுவோம்.

ஒரு மாதம் கோடைக்கானலில் நாட்கள் சென்றதே தெரியவில்லை; அவ்வளவு உற்சாகத்திலும் சந்தோஷத்திலும் இருந்தோம். சுப்பலம் மட்டும் எங்களுடன் இல்லை. கணவருடன் மாமியார் அகம் சென்றிருந்தாள். அவளும் நம்மைப் போல் அப்பாவுடன் சேர்ந்து இருப்பதற்கு இல்லையே என்ற குறை எங்களுக்கு. அவ

ளுக்கும் நாங்கள் எங்கள் கோடைவாசத்தைப் பற்றிப் பேசும் பொழுதெல்லாம் அப்படித்தான் இருந்தது. சென்னையிலுள்ள வேலைகளும், ஓயாது வந்து பார்க்கிற வர்களும் எங்கள் தந்தைக்கு இங்கு இல்லை. எங்களுடன் இருக்க அவகாசம் இருந்தது. சென்னைப் பங்களாவைப் போலவா? என்ன இருந்தாலும் சின்ன இடந்தானே இங்கு?

எங்கள் தந்தை ஓய்வு எடுத்துக்கொண் டிருந்த கோடைவாசத்திலும் சும்மா இருந்துவிடவில்லை. பல வான நூல்களைப் படித்தார். அங்கு வானிலை ஆராய்ச்சி நிலையத்தில் (Observatory) வேலை பார்த்து வந்தார் நாகராஜ ஐயர் என்பவர். எந்த நேரத்திலும் எங்கள் வீட்டிற்கு வருவார். இரவானாலும் அந்த இருட்டு மலைப்பாதையில் செல்ல அவருக்குப் பயம் கிடையாது. அவருடன் வானிலைகளைப்பற்றிப் பேசுவார் எங்கள் தந்தை. அப்பொழுது வால் நட்சத்திரம் ஒன்று வானத்தில் தோன்றியிருந்தது. அதை வான நிலையத்துக் கருவிகள் மூலம் பார்ப்பார்கள். இவ்விதம் புதுப் புது விஷயங்களை அறிந்துகொள்வதில் அவருக்கு ஆர்வம்.

# கவர்னருக்கு விருந்து

மறு வருஷமும் நாங்கள் கோடைக்கானல் போவதாக இருந்தோம். அதற்கு வேண்டிச் சில பெரிய சாமான்களைக்கூட அங்கு விட்டு வந்தோம். வீடுதான் எங்களுக்குச் சொந்தமாயிற்றே. இனி ஒவ்வொரு வருஷமும் போவதற்குத் தடை என்ன?

ஆனால் அப்படிச் செய்ய முடியவில்லை. எங்கள் தந்தைக்குச் சென்னைக் கவர்னரின் நிர்வாக சபை அங்கத்தினர் வேலை ஆகிவிட்டது. காடாறு மாதம், நாடாறு மாதம் என்று அரசர்களுக்குச் சொல்லுவார்கள்.

ஏனெனில் காட்டையும் நாட்டையும் ஆளுகிறார்கள் என்பதற்காக. அதுபோல எங்கள் தந்தைக்கு ஆறு மாதம் மலைவாசம்; நீலகிரியில் இருக்க வேண்டும். அரசாங்கமே அல்லவா ஏப்ரல் மாதத்திலிருந்து அங்கே சென்றுவிடும்? முதல்முதல் ஓர் இந்தியருக்குக் கொடுத்த உத்தியோகம் அது. ஊரே அமர்க்களப்பட்டது. ஆனால் நாங்கள் சிறுவர்கள். எங்களுக்கு ஒன்றும் தெரியாது.

அன்று வேலை ஒப்புக்கொண்ட தினம். நீதிபதியின் பியூன் ஒருவன், எங்களைப் பள்ளியிலிருந்து மத்தியான்னம் அழைக்க வரும் வண்டியில் வந்திருந்தான். "இனிமே நான் உங்க ஊட்டுலே இருக்க மாட்டேன்;எதிர்ஊட்டுக்குப் போயிடுவேன்" என்று விளையாடுகிற மாதிரி சொன்னான். எங்களுக்கு அவன் சொன்னது ஒன்றும் புரியவில்லை. அகத்திற்கு வந்த பிறகுதான், எங்கள் தந்தை பார்த்திருந்த நீதிபதி உத்தியோகம் சுந்தரையருக்கு ஆகியிருப்பதும், எங்கள் தந்தை கௌன்சில் மெம்பர் ஆகியிருப்பதும் தெரிந்தன. வேலை ஏற்றுக்கொள்ளும் நேரத்திற்குச் சரியாகப் பதினைந்து குண்டுகள் போட்டார்கள்.

"ஊருக்குச் செல்லும்பொழுதும் வரும்பொழுதுங் கூடக் குண்டுகள் போடுவார்களாம்" என்று சுந்தர வாத்தியார் சொன்னார். "அம்மா, கவர்னர் என்றுதான் ஊரிலே ஜனங்கள் சொல்லுகிறார்கள்" என்றார் அவர், பாலத்தினிடம். சுந்தர வாத்தியார் யார் என்பதைச் சொல்ல வேண்டியது அவசியம். அவர் சாமானிய மனிதர்தாம்; ஒரு சாதாரண ஹைஸ்கூல் உபாத்தியாயர். அதிலும் முதல் பாரத்து டீசர். அவருக்கு அதிகம் கல்வி கேள்வி இருக்க நியாயம் இல்லை. ஆனாலும் என்ன? அவர் நேர்மைக் குணமோ, அவருக்கு எங்கள் குடும்பத்தில் இருந்த பற்றுதலோ வேறொருவருக்கும் இருக்காது. எங்கள் தாயை அவர் தெய்வமாகவே கருதுவார். அவளைப்பற்றிச் சொல்லும் பொழுதெல்லாம், "அந்த அம்மாவைப் போலக் கிடையாது" என்பார். அப்படி ஒரு விசுவாசம்

அவருக்கு. ருசி அறிந்து சாப்பிடுவார். பரிசாரகர்கள் முதல் 'வாத்தியார், வாத்தியார்' என்று வெகு பரிவாக அழைத்து அவருக்கு உணவளிப்பார்கள். அவ்விதம் இங்கிதமறிந்து நடந்துகொள்ளும் சாமர்த்தியம் அவருடையது. எங்களுக்கு அவர் டியூஷன் சொல்லிக் கொடுத்தது மட்டுமல்ல; நகைநட்டுச் செய்யத் தட்டானிடம் தங்கமோ வெள்ளியோ நிறுத்துக் கொடுக்கவும், பிறகு அவனிடம் நடைநடையாக நடந்து கொடுத்த சாமானைத் திரும்ப வாங்கி வரவும் எல்லாவற்றுக்கும் அவர்தாம்.

இப்பொழுது போல நம்பிக்கையுள்ள ஷாப்புக்கள் ஏது அப்பொழுது? பெண்களாக நகைகள் செய்யக் கொடுத்து ஏமாறுவதுதான் சகஜம். ஒரு படி கமலமானுலும் மடியில் சுமந்துகொண்டு டவுன் ஒரு கோடி சென்று மதிப்புக் காட்டி வருவார். ஒன்று கெட்டுப் போக்கினது கிடையாது; ஒரு தவறு செய்ததில்லை. வேடிக்கை வேடிக்கையாகப் பேசுவார். ஒரு சமயம் எங்கள் தாய் எங்கள் தகப்பனர் சாப்பிட நேரம் பண்ணுவதற்கு அலுத்துக்கொண்டு, "இவரோடு யார் இருக்கிறது?" என்ருள். "வேண்டாம் அம்மா, ஒரு நாளைக்கு அவரை எங்கள் அகத்திற்கு அனுப்பிவிடுங்களேன்" என்று வாத்தியார் முகத்தைக் கெஞ்சுகிற பாவனையில் வைத்துக்கொண்டு சொன்னதும் எல்லோருக்கும் சிரிப்பு வந்துவிட்டது. தம்மிடம் படிக்கும் சிறுவர்களை அவர் அடிக்க மாட்டார். அப்படி இருந்தும் அவரிடம் எல்லோருக்கும் பயம். என்ன பாஷையோ தெரியாது, "கண்டமுதுண்டமு சேசி கடுவலம்புனரா" என்று பல்லைக் கடித்துச் சொல்லி, குஸ்திக்கு வருகிறவர்போலக் கையை ஆட்டிக் கொண்டு வந்தாரானுல் நாங்கள் நடுங்கிவிடுவோம். நினைத்துப் பார்த்தால், அப்போதைய மனிதர்களே நேர்மையும் உழைப்பும் மிகுந்தவர்கள் என்று தோன்றுகிறது.

எங்கள் தந்தை உத்தியோகம் ஏற்றதும் எங்கள் வீட்டில் கவர்னருக்கு ஒரு பெரிய தேநீர் விருந்து நடத்தி

னார்கள். அது அந்த உத்தியோகத்துக்குச் செய்ய வேண்டிய முறை என்று நினைக்கிறேன். அப்பொழுது சென்னைக் கவர்னராக இருந்தவர் ஸர் ஆர்தர் லாலி என்பவர். அவருக்கு எங்கள் தந்தையின் மேதையில் அபார மோகம் இருந்தது என்று சொல்வார்கள். இதற்கு முன்பே எங்கள் தந்தையை இந்த உத்தியோகத்தை ஏற்கும்படி அவர் கேட்டும் எங்கள் தந்தைதாம் அதற்கு இணங்கவில்லையாம். இப்பொழுது எங்கள் தந்தை ஏற்றுக்கொண்டதும் அவருக்கு மிகவும் சந்தோஷம் என்றுகூடச் சொல்லுவார்கள். அந்த விருந்திற்கு வெள்ளைக்காரர்கள் பலர் இந்திய மெம்பரைப் பார்க்க வேண்டும் என்ற ஆசையால், தாங்களே நேரில் வந்து அழைப்பு இதழ் வாங்கிப் போனார்களாம்.

விருந்து மிகவும் விமரிசையாக நடந்தது. ஆயிரம் பேர்களுக்கு மேல் வந்ததாகச் சொல்லுவார்கள். அன்று லஸ் சர்ச்சு ரோடு முழுவதும் வண்டிகளாக நின்றது இன்னமும் கண்முன் நிற்கிறது. விதவித விளக்குகள் போட்டு எங்கள் வீடும் தோட்டமும் பிருந்தாவனமாகக் காட்சி அளித்தன. அப்பொழுது எங்கள் வீட்டிற்கு மின்சார விளக்குகள் வரவில்லை. Chinese lantern, அது, இது என்று ஏதேதோ தொங்க விட்டிருந்தார்கள். அது ஒரு தனி அழகுடன் விளங்கிற்று. பங்களாவின் முன் புறத்தில் ஒரு மாமரம். அதனடியில் சுபாவமான நாடக மேடை அமைத்து, தேநீர் அருந்தின பிறகு அதில் ஒரு சிறு நாடகமும் நடத்தினார்கள். சகலமும் வெகு நேர்த்தி யாகவும் அழகாகவும் இருந்ததாக அப்புறம் தினசரிகளி லெல்லாம் வந்திருந்தது.

சுப்பலந்தான் கவர்னரின் மனைவியை வரவேற்றாள். மாலைகூட அவள்தான் அணிவித்தாளோ, அல்லது மூத்தவள் என்பதற்காக, பாலம் போட்டாளோ, நினைவில் இல்லை. நாங்கள் சிறுவர்கள்; எங்களுக்கு ஒரே குதூகலம். நிறைய ஐஸ் கிரீம் சாப்பிட முடிந்ததே;

அது போதாதா? ஆனால் ஒரு குறைதான். எங்கள் வீட்டுத் தோட்டத்தின் ஒரு புறத்தில் படிக்கணக்கில் அரும்பு எடுத்துப் பூத்துக்கொண் டிருந்த மல்லிகைச் செடிகளை வெட்டி எடுத்து மணல் பரப்பி அந்த இடத்தில் விருந்து வைத்துவிட்டார்கள்! நாங்கள் அந்த அரும்புகளை எடுத்துத் தொடுத்தும் கோத்தும் தலை நிறையச் சூடிக் கொண்டு எங்கள் தோழிகளுக்கும் அனுப்புவோமே. இனி அது செய்வதற்கு இல்லையே! வெள்ளிக்கிழமைகளில் அம்பாளுக்குச் சாத்தும் புஷ்பப் பாவாடைக்கு எங்கள் வீட்டிலிருந்து மல்லிகை அரும்புகள் போவதுண்டு. இனி அது முடியாது என்று ஆகிவிட்டது.

விருந்து முடிந்து சாப்பாடான பிறகு எங்கள் தந்தை பங்களாவின் முன்புறத்தில் வழக்கம்போல நாற்காலியில் வந்து அமர்ந்தார். விருந்திற்குப் பின் தங்கி அவருடன் உணவருந்தின சில நண்பர்களும் இருந்தார்கள். அப் பொழுது எங்கள் தந்தை, அப்புவை நந்தன் சரித்திரக் கீர்த்தனங்கள் சிலவற்றைப் பாடும்படி சொன்னார். நாங்கள் வழக்கம்போல அன்று எட்டு மணிக்குப் படுக்கப் போய் விடவில்லை. விருந்தாயிற்றே; பெரியவர்களுக்குச் சரியாக நாங்களும் விழித்திருந்தோம். 'ஐயே ஒரு சேதி கேளும்' என்கிற பாட்டை, அப்புவும் மஹாலியும் - அவன் தான், எங்கள் சிறிய தாயார் மகன் - இருவரும் சேர்ந்து பாடினது இன்னமும் காதில் ஒலித்துக்கொண் டிருக்கிறது. நிச்சப்தமான அந்த இரவு வேளையில், குழந்தைக் குரலில் மேல் ஸ்தாயியில் அவர்கள் பாடினது, ராமாயணம் பாடின குசலவர்களுடைய கீதம்போல இனிமையாக இருந்திருக்கவேண்டும். 'ஐயே தெரியாதென்று சொன்னார்' என்கிற அடியை அவர்கள் திரும்ப அழுத்திப் பாடி நிறுத்தினதும், அவ்வளவு உழவர்களும் நந்தனுக்காகத் தவித்துப் பிராம்மணரிடம் நம் எதிரில் முறையிடுவது போலவே தோன்றிவிட்டது போலும்; எல்லோரும் 'ஆஹா' என்று மகிழ்ந்தார்கள்.

## மாப்பிள்ளை தேர்தல்

ஒரு சமயம் யாரோ ஒரு பெரியவர் மகா பாரதத்திலிருந்து சாவித்திரி உபாக்கியானத்தையும் நளோபாக்கியானத்தையும் தமிழில் மொழிபெயர்த்துச் சிறிய பாக்கெட் எடிஷன் என்பார்களே, அவ்விதம் அச்சிட்டு எங்கள் தந்தையினிடம் கொண்டுவந்து கொடுத்தார். அந்தப் புத்தகங்களை எங்கள் தந்தை சாவித்திரியிடம் கொடுத்து, "நான் இவற்றை உன்னிடம் எதற்காகக் கொடுக்கிறேன், தெரியுமா? சும்மாப் படிக்க வேண்டுமென்பதற்காக மட்டும் அல்ல; நீயும் அவர்

களைப்போல இருக்க வேண்டும் என்பதற்குத்தான்" என்றார்.

அவர் எதற்காக அவ்விதம் கூறினார்? கற்புக்கரசிகளான சாவித்திரியையும் தமயந்தியையும் போல, முன் மாதிரிகள் அந்த இளவயதிலே மனத்தில் பதியவேண்டும் என்பதற்காகவா? சாவித்திரிக்கு அப்பொழுது மண மாகி இருந்தது. பதினாறு வயசு நிரம்பாத இளைஞர் அவள் கணவர். மெட்றிக் பரீட்சையில் முதல்வராகத் தேறியிருக்கிறார் என்று எங்கள் தந்தை அவருக்குப் பெண்ணைக் கொடுத்தார். அவர் எவ்விதம் வளர்ச்சி பெறு வாரோ, தந்தைக்கு நிச்சயம் தெரியவில்லை. 'பிறகு பெண் ஒருகால் மனம் வருந்தும்படி அவர் இருந்து விட்டால்?' என்கிற கவலை அவருக்கு. கணவரிடம் வெறுப்போ அலட்சியமோ தோன்றிவிடக்கூடாது. அது பிறகு சந்தோஷ வாழ்க்கைக்கே ஹானி ஆகிவிடும். அவ்விதம் ஒன்றும் நேராமலிருக்க இந்தப் பதிவிரதைகளின் சரித்திரங்கள் உதவும் என்று நினைத்தார்போலும். மனத்தில் கணவன் என்கிற பக்தி ஏற்பட்டுவிட்டால் குறைகளுக்கு இடம் இராதல்லவா?

எங்கள் தந்தை மாப்பிள்ளை தேர்ந்தெடுப்பதில், பணம், அந்தஸ்து என்று பார்க்கவில்லை. கல்வி, குணம், குலம், ரூபம் இவை பொருந்தி இருக்கிறதா என்று பார்த்துத் தேர்ந்தெடுத்தார் என்பது பிரசித்தம். எவ்வளவோ பெரிய மிராசுதார்கள் தங்கள் குமாரர்களுக்கு அவர் மகளை மணம் புரிந்துகொள்ளக் காத்திருந்தும், படிப்பொன்றும் இல்லை என்பதற்காக அவர் அவர்களைப் பாராமல் இருந்தார்; அதிலிருந்து அவருடைய எண்ணம் எல்லாருக்கும் தெரியாமலிருக்குமா? பணம் என்ன, சம்பாதித்துக் கொள்ளலாம் என்பது அவர் தைரியம்.

என் அத்திம்பேர்கள் அவர் நினைத்தபடிதான் இருந்தார்கள். பாலத்தின் கணவரை அவருக்கு மூத்த மகன் என்று சொன்னாலும் தவறாகாது. எங்கள் சிறிய தந்தை

தனியே போன பிறகு அவர்தாம் எங்கள் வீட்டுக் காரியங்களுக்கெல்லாம் பொறுப்பு வகித்தார்.

சாவித்திரிக்குப் பத்து வயசு நிரம்புவதற்குள் எங்கள் தந்தை மணம் செய்வதாக நினைத்திருக்கவில்லையாம். பெண்களுக்கு இந்தக் குழந்தை விவாகம் கூடாது என்கிற எண்ணம் அப்பொழுது அவர் மனத்தில் தோன்றியிருக்கிறது. அதன்படி அவர் செய்திருப்பாரோ என்னவோ; ஆனால் எங்கள் தாயின் வற்புறுத்தலினால் அவர் சாவித்திரிக்கு விவாகம் செய்யும்படி ஆயிற்று. எங்கள் தாய் என்னவோ அந்த விவாகம் நடந்த சடுதியிலேதான் இறந்து போய்விட்டாளே. அவள் இருந்து பெண்ணுக்கு நற்பழக்கங்களைப் பழக்குவதற்கு இல்லையே என்று அவர் நினைத்தார் போலும்!

# உதகமண்டலம்

நாங்கள் ஏப்ரல் மாதமே ஊட்டி சென்று விட்டோம். அந்த மலைவாசத்தை இன்று நினைத்தாலும் மனத்துக்கு இன்பம் உண்டாகிறது. அவை எங்கள் வாழ் நாட்களிலேயே மறக்க முடியாத நன்னாட்களாக அமைந்து விட்டன. எங்கள் தந்தையுடன் நெருங்கி இருந்தோம். அது மட்டும் அல்ல; அவரைக் காண வருகிறவர்களும் எங்களுக்கு நன்கு பழக்கமானார்கள். மகாகனம் ஸ்ரீநிவாச சாஸ்திரியார் எங்கள் வீட்டிற்கு எப்பொழுதும் வருகிறவர். அவர் தொண்டு செய்த இந்திய ஊழியர் சங்கம்

எங்கள் தந்தை முன்னின்று ஆரம்பித்து வைத்ததுதான். அதில் அவர் சேர்ந்தது எங்கள் தந்தையின் தூண்டுதலி ஞல்தான் என்றுகூடப் பலருக்கு எண்ணம் இருந்தது. எதுவாஞலும் அவர் அதில் சேராதிருந்தால், இவ்வளவு பேரும் புகழும் மேல்நாடுகளில்கூட ஏற்பட்டனவே; அவை கிடைத்திருக்குமா? சென்னையில் அன்ருடம் தவருமல் எங்கள் வீட்டுக்கு வருவார். எங்கள் தந்தை மாலையில் கச்சேரியிலிருந்து வருவதற்கும், சாஸ்திரியார் அவரைப் பார்க்க வருவதற்கும் சரியாக இருக்கும். அவர் களின் பேச்சு முடிவடையாது. இரவு சாப்பிடவும் இருந்து தான் போவார். 'அப்படி என்னதான் இருக்குமோ பேச?' என்று நாங்கள் நினைப்போம். இவ்வளவு இருந்தும் நாங்கள் அவருடன் பேசினதில்லை.

ஆனுல் ஊட்டியில் அவ்விதம் இல்லை. அவர் எங்கள் கிருகத்திலேயே தங்கினதனுல் மட்டுமல்ல, நாங்கள் எங்கள் தந்தையுடன் கூடவே அதிகம் இருந்த தனுல், அவருடனும் பேசிப் பழகும்படி ஆயிற்று. வெள்ளைக்காரர்களின் பழக்கமும் மலைவாசத்தில் மிகவும் அதிகம். கவர்னர் மாளிகைக்கும் எங்கள் தந்தையுடன் மெம்பராக இருந்தவர்களின் கிருகங்களுக்கும் நாங்கள் அடிக்கடி சென்று வருவோம். அவர்களும் எங்கள் இடத் துக்கு வருவார்கள்.

சென்னையில் பிஷப்பாக இருந்த வொயிட்ஹெட் (Bishop Whitehead) என்ற பாதிரியாரும், அவர் மனைவியும் எங்களுக்கு மிகவும் சிநேகமானுர்கள். சாஸ்திரி யாருக்கும் அவர்கள் வெகு சிநேகந்தான். அவர்கள் வீட்டிலேயே கூடச் சில தினம் தங்கியிருக்கிருர் அவர். 'ஒரு வெள்ளைக்காரர் வீட்டில் தங்குவதாவது?' என்று, எங்களுக்கு அது செய்யத்தகாத காரியம்போலத் தோன்றும். சாஸ்திரியாருக்கு எங்கள் தந்தையினிடத்தில் மிகுந்த பக்தியும் பிரேமையும் உண்டு என்பதை நாங்கள் பிறகுதான் தெரிந்துகொண்டோம்.

பிஷப் வொயிட்ஹெட்டுக்கும் அவர் மனைவிக்கும் எங்கள் தந்தையின் புத்திக் கூர்மையைக் கண்டு அவரிடத்தில் பெருமதிப்பு. பிஷப் எங்கள் தந்தையுடன் எவ்வளவோ மத விஷயங்களைப்பற்றி விவாதித்து; எங்கள் தந்தையினுடைய மதப்பற்றையும், அதுபற்றி அவருக்கு இருந்த விசேஷ அறிவையும் கண்டு அதிசயப்பட்டிருக்கிறார். அவர் மனைவி மிகவும் கெட்டிக்காரி. உயர்ந்த வம்சத்தைச் சேர்ந்தவள். கணிதத்தில் பி. ஏ. பாஸ் செய்திருந்தாள். அப்பொழுது வெள்ளைக்காரப் பெண்களில்கூடப் படித்துப் பட்டம் பெற்றவர்கள் அதிகம் இருந்ததில்லை என்று நினைக்கிறேன். ஆகையால் அவளுக்கு அதில் ஒரு பெருமை இருந்தது. எங்களிடத்தில் வெகு சிரத்தை காண்பித்தாள். எங்களுக்கு வெள்ளைக்காரர்களுடன் நெருங்கிப் பழகும் விதத்தையெல்லாம் கற்றுத் தருவதாகச் சொன்னாள். ஊட்டியிலே சிற்றுண்டி விருந்துகள் வைப்பதற்கு அவள் கற்றுக் கொடுத்தாள் என்றுகூட நினைக்கிறேன். ஆட்கள் தேநீர் ஊற்றிக் கொடுக்கக்கூடாது. நாமே அதைச் செய்ய வேண்டும் என்பது, அவள் சொல்லித்தான் எங்களுக்குத் தெரிந்தது. நம் பழக்க வழக்கங்களைப்பற்றி எவ்வளவோ கேட்பாள். அவளுடன் முழுக்க முழுக்கச் சுப்பலந்தான் பேசுவாள். பாலத்துக்குப் பாஷை தெரியாது. அதனால் சம்பாஷணை நடத்த முடியாது. அந்தக் குறையை நிவர்த்திக்கத்தான் எங்கள் தந்தை அவளுக்கு இங்கிலீஷைச் சுலபமான முறையில் கற்று வைத்துவிடுவது என்று ஆரம்பித்தார்.

எங்கள் தந்தையாரின் தந்தைக்கு அதிகமாக ஒன்றும் ஆங்கிலம் தெரியாதாம். ஆனாலும் முன்சீப் உத்தியோகத்தில் அவர் எழுதின நியாயத் தீர்ப்புகளெல்லாம் எல்லோரும் மெச்சும்படி இருந்தனவாம். ஆகையால் ஆங்கிலம் கொஞ்சம் தெரிந்தாலும் சமாளித்துவிடலாம் என்கிற எண்ணம் அவருக்கு. அதற்கு வேண்டி அன்றுடம்

மாலையில் நாங்கள் உலாவச் சென்று வந்ததும், அவர் சந்தி பண்ணி ஆபீஸ் அறையில் வந்து அமர்வார். நாங்களும் நோட்டுப் புத்தகத்துடன் வந்து சேருவோம்.

இலக்கணம் (Grammar) என்பதாகத் தனியே இல்லாமல் சில சொற்களை மட்டும் சொல்லி அவற்றுக்குப் பொருளையும் கொடுத்து, பாலத்தை எழுதிக் கொள்ளச் சொல்லுவார் என் தந்தை. நாங்கள் அவற்றைப் பாடம் பண்ணி, மறுநாள் அவர் கேட்கும்பொழுது சொல்ல வேண்டும். இவ்விதம் ஓரளவு சொற்கள் அர்த்தத்துடன் தெரிந்ததும் வாக்கியமாகச் சேர்க்கக் கற்றுக் கொடுத்துவிடலாம் என்பது அவர் கருத்து. அவர் சொற்களுக்குப் பொருள் விளக்கும் முறைகூடத் தனியாகத்தான் இருந்தது. 'Cry, Sob, Weep' என்ற மூன்று ஆங்கிலச் சொற்களுக்கும் அவர் அப்புவையும் என்னையும் சாவித்திரியையும் உதாரணமாகச் சொல்லி விளக்கினது இன்றும் நினைவில் இருக்கிறது. அப்பு பெரிதாகக் குரல் எழுப்பி ஊளையிடுகிற மாதிரி அழுவான். எனக்கு அழுகையே கிடையாது; விசிப்புத்தான். சாவித்திரி கண்ணீரை மாலைமாலையாகச் சொரிவாளே தவிர, வேறு சத்தம் அவளிடத்திலிருந்து கிளம்பாது. அந்த மூன்று சொற்களும் இப்பொழுது தெளிவாகிவிட்டன அல்லவா?

இரவு சாப்பிட்ட பிறகு பாலத்தை ஸம்ஸ்கிருதத்தில் கீதை வாசிக்கச் செய்து அதற்குப் பொருள் கூறுவார். பெரிய வேதாந்திகளும் அறிய முடியாத கீதா தத்துவத்தை எங்களைப் போன்ற சிறுவர்களுக்கு அவர் கற்றுக் கொடுத்ததற்குக் காரணந்தான் என்னவோ? 'பழைய ஆடையைக் களைந்து புதிய ஆடையை ஏற்பது போலத்தான், இந்தச் சரீரத்தை விட்டு வேறொரு சரீரத்தை அடைவது. இந்தச் சரீரந்தான் அழிகிறதே ஒழிய அதிலுள்ள ஜீவனுக்கு அழிவு இல்லை.' இதுபோன்ற தத்துவங்களை நாங்கள் அறிந்து, சாவுக்கு அஞ்சவோ

வருந்தவோ கூடாது; எங்கள் மனம் சாவை ஸகஜமாக ஏற்கப் பழக வேண்டும் என்பதற்காகவே அவர் எங்களுக்குக் கீதையைப் புகட்டினார் என்று எண்ணுகிறேன்.

அவருடைய மனம் எப்பொழுதும் தியாகத்தில் ஈடுபட்டிருந்திருக்க வேண்டும். மகாபாரதத்திலுள்ள பாத்திரங்களில் அவருக்குப் பீஷ்மரிடத்தில் மதிப்பும் கௌரவமும் அதிகம். தியாகத்துக்குப் பீஷ்மரை விட வேறொருவர் உண்டா? பீஷ்மரைப் பற்றித்தான் எப்பொழுதும் சிலாகித்துப் பேசுவார். யுத்த களத்தில் சிகண்டியை முன்வைத்துக் கொண்டு பின்னிருந்து அர்ஜுனன் பாணங்கள் எய்தபோது பீஷ்மர் சொன்ன சுலோகங்கள் அவருக்கு மிகவும் பிடித்தவை. சாவித்திரி அதை அவரிடம் படித்திருக்கிறாள். அவர் மரணப் படுக்கையில் இருந்தபொழுதுகூட அவளை அதை வாசிக்கச் செய்து கேட்டார் என்று நினைக்கிறேன். பாபா பாரதி என்கிற வங்காளச் சந்நியாசி அவரை முன் ஜன்மத்தில் பீஷ்மராக இருந்தார் என்றுகூடச் சொல்லியிருக்கிறார். அதை யார் கண்டது? ஆனால் அவருக்குப் பீஷ்மரிடத்தில் வெகு ஈடுபாடு. சாவித்திரியின் ஸம்ஸ்கிருத உச்சரிப்பு வெகு சுத்தமாக இருக்கும். எங்கள் தந்தையினிடத்தில் படித்து அவளுக்கு அவ்விதம் வாக்குத் திருந்திவிட்டது என்று நாங்கள் சொல்லிக் கொள்ளுவோம்.

'பீஷ்ம விஜயம்' என்கிற பெயரில் பீஷ்மருடைய கதையை லக்ஷ்மண ஸூரி என்கிற பெரியார் எழுதியிருந்தார். அதைச் சாவித்திரி தமிழில் மொழிபெயர்த்தாள். ஸம்ஸ்கிருதத்தில் எப்படி இருந்ததோ தெரியாது; தமிழில் வெகு அழகாக இருந்தது. 'விவேக சிந்தாமணி' என்கிற மாதப் பத்திரிகையில் அச்சாகி வந்தது என்றுகூட நினைக்கிறேன். அதை மொழிபெயர்க்க வேண்டுமென்று சாவித்திரிக்குத் தோன்றினதற்கே எங்கள் தந்தை மிகவும் சந்தோஷப்பட்டுக் கொண்டாராம்.

அவரை மிகுந்த ஸநாதன தர்மப்பற்றுள்ளவர் என்றே சொல்ல வேண்டும். கோர்டைக்கானல் குளிரி லுங்கூட எங்கள் தமையனே எங்கள் தாய்க்கு நித்திய சிராத்தம் செய்யச் செய்திருந்தார் என்றால் அதற்கு மேல் சொல்லுவானேன்? எவ்வளவு வேலையிலும் அவர் சந்தி பண்ணத் தவற மாட்டார். அந்த மலைக் குளிரி லுங்கூட அவர் ஸ்நானம், சந்தி இவற்றைத் தவற விட்டதில்லை. ஆனால் கேவலம் மூடநம்பிக்கையால் நம் பழக்க வழக்கங்களைப் பின்பற்றுகிறவர் அல்ல. வேஷ்டி கட்டிக்கொள்வதுதான் நம்முடைய பழக்கம் என்பதற் காக, அந்தக் குளிரில் அவ்விதந்தான் இருக்கவேண்டு மென்று நினைக்கவில்லை. வெளியே செல்லும்பொழுது சராய் அணிந்துதான் செல்வார்.

எங்களுக்கும் குளிருக்கு வெளியே போட்டுக் கொண்டு போக ஓவர் கோட்டுகள் தைத்திருந்தார்கள். சாவித்திரி, 'அது வெள்ளைக்காரர்களுக்குத்தான் சரி; நமக்கு நன்றாக இராது' என்கிற எண்ணத்தில் பெரும்பா லும் போட்டுக்கொள்ள மாட்டாள். ஆனால் நான் அப்படி அல்ல. வெளியே செல்லும்போது அணிந்து செல்வேன். அதைப் பார்த்துவிட்டுத்தான் கே. ஸ்ரீநிவாச ஐயங்கார் மகன் ஆராவமுது தன் அம்மாவிடம், "அம்மா, கிருஷ்ண சாமி ஐயர் பெண்ணைப் பிள்ளையாக வளர்க்கிறார்" என்று உயர்த்தியாகச் சொன்னானும். பிறகு அந்த அம்மாள், பாலம் சென்னை வந்தபொழுது சொல்லியிருக்கிறாள். அவள் எங்கள் தாய்க்குப் பிராண சிநேகிதி. எங்கள் தாய் 'பத்மாசனி, பத்மாசனி' என்று தன் அந்தரங்கங் களையெல்லாம் அவளிடந்தான் கூறிக்கொள்வாள் அவள் கணவர் எங்கள் தந்தைக்கு நண்பர். அவள் பெண்கள் இருவரும் சாவித்திரிக்கும் சுப்பலத் துக்கும் சிநேகம்; ஒன்றாகப் பள்ளி சென்று படித்தவர்கள் இன்றும் அவர்களுக்குச் சுப்பலத்தைப் போலவும் சாவித் திரியைப் போலவும் படித்தவர்கள் கிடையாது என்கிற

கிணேப்பு. பெண்கள் பள்ளி சென்று படிப்பதே குறைவாக இருந்த அந்த நாளில் இவர்கள் படிப்பு அவர்களுக்குப் பெரிதாகத் தோன்றியிருக்கிறது.

எங்கள் தந்தை ஊட்டியில் இருந்தபொழுது காலையிலும் மாலையிலும் உலாவச் செல்லுவார். நாங்கள் நடக்கப் பிடிக்காமல் சாக்குப் போக்குச் சொன்னுலும் விடமாட்டார். எங்களையும் வற்புறுத்தி உடன் அழைத்துப் போவார். நாங்கள் சேர்ந்து நடக்க ஆரம்பித்தாலும் அவர் சற்றுத் தூரம் போகவே, ஒருவர்பின் ஒருவராகப் பின் தங்கிச் செல்லத் தொடங்கிவிடுவோம். இதை ஸ்ரீமதி வொய்ட் ஹெட் (Mrs. Whitehead) ஒரு தரம் பரிகசித்து டிராயிங் கோடு இழுத்து அனுப்பிவிட்டாள். முதலில் எங்கள் தந்தை தோளில் குடையைச் சார்த்திக்கொண்டு போகிருர்; பிறகு வரிசையாக நாங்கள் ஆளுக்கு ஒரு குடையுடன் செல்கிறோம். எங்களுக்கு அதைப் பார்த்து ரோசம் பொத்துக்கொண்டு வந்தது. பதிலுக்கு அவர்களுடையது எதையாவது பரிகசித்து எழுத வேண்டும்போல ஆத்திரம் தோன்றிற்று. ஆனுல் எங்கள் தந்தை அதைச் சிரித்துக் கொண்டுதான் ஏற்ருர். அவர் குடையைத் தோளில் சார்த்திக்கொண்டு போவது அழகல்ல. அதையுந்தான் அவள் குறிப்பிட்டுக் காட்டியிருந்தாள். எங்கள் தந்தைக்கு அதுபோல் நடந்து பழக்கமாகிவிட்டது. ஆகையால் அவர் அதை மாற்றிக்கொள்ளப் போவதில்லை.

அற்ப விஷயங்களுக்கெல்லாம் 'மானர்ஸ்' (Manners)என்று அவர்கள் சிரமப்படுவதுபோல நாமும் எதற்காகப் பாடு படுவது என்கிற எண்ணம் அவருக்கு. "நீங்கள் 'thanks' என்றுகூடச் சொல்லுகிறதில்லை. அது என்ன பழக்கம்?" என்று அவள் ஒரு சமயம் கேட்டதற்கு, "வந்தனம் என்று வாயால் சொல்லிவிட்டு, ஒருவர் செய்த உபகாரத்தை மறந்துவிடக்கூடாது என்பதற்காகத் தான், நாங்கள் 'thanks thanks' என்கிற வெறும்

சொற்களை உபயோகிப்பதில்லை'' என்று எங்கள் தந்தை அதற்குச் சமாதானம் கூறியிருக்கிறார். இவ்விதம் எவ்வளவோ, நம் பழக்க வழக்கங்களைப்பற்றி அவள் அநேகமாகப் பரிகசித்துத்தான் கூறுவாள். ஒரு சமயம் எங்களிடம், ''மேஜை கீஜை, நாற்காலி கீற்காலி என்கிறீர் களே. மேஜை என்றால் அர்த்தம் இருக்கிறது. கீஜைக்கு என்ன அர்த்தமாம்?'' என்று கிண்டலாகக் கேட்டாள். சுப்பலம் ஏதேதோ சமாதானம் சொல்லிப் பார்த்தாள். சரியாக இல்லை. அது சமயம் எங்கள் தந்தை அவ்விடம் வந்தவர், என்ன விவாதம் என்பதைத் தெரிந்துகொண்டு, ''மேஜை இல்லாவிட்டால், அதுபோல உபயோகப்படக் கூடிய பொருள் மற்றொன்று என்பதுதான் கீஜைக்கு அர்த்தம்'' என்று சொன்னார். அவள் வாய் திறக்க வில்லை. எங்களுக்கும் அப்பொழுதுதான் அது தெரிந்தது.

புதிதாக எங்கள் தந்தை முதல்முதல் வாங்கின 'ஆச்சிகிஸ்' என்னும் கார் எங்கள் மலைவாசத்தின் பொழுதுதான் வந்தது. கார் வருகிற சமாசாரம் எங்கள் சிறிய தந்தையின் கடிதத்திலிருந்து தெரியவே, நாங்கள் ஒரே பரபரப்பு அடைந்தோம். கார் என்ன வர்ணம், எப்படி இருக்கும் என்றெல்லாம் எங்களுக்கு யோசனை. சாவித்திரி ஏதோ பாட்டுப் பாடுகிற மாதிரி 'ஹார்ன்' இருந்தால் நன்றாக இருக்குமென்று நினைத்தாள் என்ப தற்கு வேண்டி இரண்டு மூன்று சுவரம் பேசுகிற 'ஹார்ன்' வைத்திருந்தார்களாம். இதைக் கேட்டு மேலும் பரபரப்பு எங்களுக்கு.

மோட்டாரும் வந்தது. வீடுபோலப் பெரியது. தம் குடும்பம் முழுவதும் கொள்ளக்கூடியது என்று எங்கள் தந்தைகூடத் திருப்தியோடு சொல்லிக்கொண்டார். மோட்டாரின் வர்ணம் ஆரஞ்சு கலர். அது அவ்வள வாகப் பிடிக்கவில்லை. அதற்கு மேலே அதன் 'ஹார்ன்' சத்தந்தான் கட்டோடு பிடிக்கவில்லை. அவ்வளவு பெரிய

காருக்குப் 'பீ, பீ' என்கிற கீச்சுச் சத்தம் கொஞ்சமும் பொருத்தமாக இல்லை. பூதம் போலப் பெருத்தவர்கள் கீச்சுக்குரலில் பேசினால் எப்படியோ அப்படி இருந்தது. சாவித்திரி எதற்காக ஆசைப்பட்டாள் என்று, அவள் உட்பட எங்கள் எல்லோருக்கும் தோன்றிற்று. மணி காரின் மெகானிசம் தெரிந்துகொண்டு, அதை ஓட்ட வேண்டுமென்று எங்கள் தந்தை ஆசைப்பட்டார். ஆனால் அவன் அது செய்வதாக இல்லை.

எங்கள் தந்தையின் அத்தான் ஊட்டிக்கு வந்து எங்களுடன் சில நாள் தங்கினார். அவரை 'ஜான்ஸனைப் பற்றி எழுதின பாஸ்வெல்' என்று கூறினாலும் சரியாகத் தான் இருக்கும். அவருக்கு எங்கள் தந்தையின் எந்தச் செய்கையிலும் பேச்சிலும் அவ்விதம் ஒரு மோகம். எங்கள் தந்தையைப் பலர் கோபக்காரர் என்று சொல்லுவார்கள். அத்தான் அதை ஒப்புக்கொண்டதில்லை. "உங்கள் அப்பாவின் புத்தி, வேகத்தில் வேலை செய்கிறது. மற்றவர்களால் அதற்குச் சரியான வேகத்தில் சென்று புரிந்துகொள்ள முடிவதில்லை. அதனால் அவருக்குச் சில சமயம் பொறுமை குறைகிறது. இவர்கள் அதைக் கோபம் என்று எடுத்துக்கொள்ளுகிறார்கள்" என்று விளக்கம் கூறுவார். அவரையே எங்கள் தந்தை கோபித்துக் கொண்டாலும் சிரித்து ஏற்றுக்கொள்ளுவாரே தவிர, பதிலுக்குக் கோபிக்க மாட்டார். எங்கள் தந்தைக்குக் கோபத்தில் எவ்வளவு வேகமாகவும் அழகாகவும் சொற்கள் வருகின்றன என்பதைத்தான் வியந்துகொள்ளுவார். சிறு வயசு முதல் நடந்த சம்பவங்களை அவர் சொல்லக் கேட்ட எங்களுக்கு, அவர் அவற்றை எழுதி வைக்காமல் போனாரே என்று இன்றும் வருத்தமாக இருக்கிறது. அவை யாரும் படித்து இன்புறும்படி அவ்வளவு சுவையுள்ளவை.

எங்கள் தந்தையின் கோபத்தை அவர் ரசித்த சம்பவம் ஒன்று அப்பொழுது அங்கு நடந்தது. அதைச்

சொல்லுகிறேன். அவருக்கு ஸ்னேடன் என்னும் மலைச் சிகரத்தைக் காண்பிக்கவென்று, மோட்டாரில் அவரை அழைத்துக்கொண்டு, பாலம், மணி, நான், அப்பு - நான்கு பேருமாகப் போனோம். மலையடிவாரத்துக்கு மேல் கார் செல்லாதாகையால், காரை விட்டு இறங்கி மலையுச்சிக்கு ஏறினோம். மேலிருந்து மறுபுறம் பார்த்தால் மைசூர் ராஜ்யம் தெரியும். கீழிருந்து மலைச்சிகரத்தைப் பார்ப்பதும், மலைச்சிகரத்திலிருந்து கீழே சமவெளியைப் பார்ப்பதுந் தானே இயற்கைக் காட்சியைக் கண்டு ரசிப்பதாகச் சொல்வது? நாங்கள் ஏறின சமயம் லேசாக இடி இடித்தது. பாலத்திற்குப் பயமாகப் போய்விட்டது. "போகலாம், வாருங்கள்" என்று சொல்லி எங்களுடன் இறங்கத் தொடங்கிவிட்டாள். அத்தானும் மணியும் சிறிது பின் தங்கினார்கள். நாங்கள் மூவரும் இறங்கி வண்டிக்கு வந்து சிறிது நேரமாகியும் அவர்களைக் காணவில்லை. நாங்கள் புறப்பட்டது மாலை நேரம் ஆகையால் இருட்ட வேறு ஆரம்பித்துவிட்டது. மலைப் பிரதேசத்தில் இருட்டுவதென்றால் கேட்க வேண்டுமா? ஒரு நொடியில் இருள் கவ்விவிடும் அல்லவா?

மோட்டார் ஹாரனை அழுத்திப் பார்த்தோம். ஒன்றும் பதில் இல்லை. பாலத்துக்கு, சிறுவர்களான நாங்களும் தானும் தனித்து இனி அங்கிருப்பது சரியல்ல என்று தோன்றிவிட்டது. திரும்ப அவர்களுக்குக் காரை அனுப்புவோம் என்கிற எண்ணத்துடன் எங்களை அழைத்துக் கொண்டு வீடு திரும்பிவிட்டாள். அப்பா கவலைப்படுவார் என்கிறது வேறு பாலத்துக்கு. அதற்குச் சரியாகத்தான் நாங்கள் வந்தபொழுது அவர் மிகுந்த கவலையுடன் வாசல் வராந்தாவில் குறுக்கும் நெடுக்கும் வேகமாக நடந்துகொண் டிருந்தார். பாலத்தினிடமிருந்து சமாசாரம் தெரிந்துகொண்டு மோட்டாரையும், கைராந்தலுடன் அவ்விடத்தில் பழகிய வேலையாளையும் அனுப்பி வைத்தார். நல்ல வேளை; அதிக நேரம் நாங்கள் கவலைப்

படும்படி இல்லை. அவர்களைப் பாதி வழியில் சந்தித்து அழைத்துக்கொண்டு வந்துவிட்டான் டிரைவர்.

அவர்களைக் காணவும் எங்கள் தந்தைக்கு இவ்வளவு நேரம் பட்ட கவலையெல்லாம் சினமாக மாறி இருக்க வேண்டும். அத்தானை, "உனக்குக் குட்டிச் சுவருக்கு ஆனது போல வயசு ஆகிறதே. இருட்டுகிறதென்று தெரிய வேண்டாமா? இவ்வளவு நேரமா செய்கிறது?" என்று கடிந்துகொண்டார். அத்தான் சும்மா இருந்திருக்கக் கூடாதா? "நாங்கள் வந்துகொண்டுதான் இருந்தோம். இவர்கள் எங்களுக்காக ஹார்ன் அடித்தது கூடக் காது கேட்டது. 'இதோதான் வருகிறோமே, இதற்குள் இவர்களுக்கு என்ன அவசரம்?' என்று குரல் கொடுக்காமல் பேசாது வந்தோம்" என்று சிரித்துக்கொண்டே கூறினதும், எங்கள் தந்தையின் சினத்தை அது பின்னும் அதிகமாக்கிற்று.

"போகிறது, சமர்த்துத்தான் போ! குழந்தைகளுக்குச் சரியாக விளையாடினுயாக்கும்! இன்னும் கொஞ்சம் வயது ஏறட்டும்" என்று வெகு கடுமையான குரலில் சொன்னார். அப்புறம் அத்தான் வாயைத் திறக்கவில்லை. அப்பா அவ்விதம் கோபத்துடன் இருக்கும்பொழுது நாங்கள் யார்தாம் வாய்திறப்போம்? அங்கு நிச்சப்தம் நிலவிக்கொண்டிருந்தது. சாப்பாடு ஆனபிறகு மாம்பழத்தைத் துண்டங்களாக நறுக்கி ஒரு தட்டில் கொண்டு வந்து வைத்தான் வேலையாள். எங்கள் தந்தை அதில் சில துண்டுகளை எடுத்து அத்தானிடம் நீட்டி, "இந்தா, எடுத்துக்கொள்" என்றார். "இதென்ன, வைததற்கு மாற்றா?" என்று சிரித்துக்கொண்டே அத்தான் கேட்டதும் எங்கள் தந்தைக்கே சிரிப்பு வந்துவிட்டது. நாங்களும் சிரித்தோம். அப்புறம் அவ்விடத்தில் கலகலப்புக்குக் கேட்க வேண்டுமா? இதுபோல எங்கள் தந்தையின் கோபத்தையும் ரசிப்பவர் அத்தான்.

# உறவினரிடம் அன்பு

எங்கள் தந்தையை மிகுந்த பந்துப் பிரியர் என்றே சொல்ல வேண்டும். அவர்களின் ஒரே சகோதரியான மீனாக்ஷிசுந்தரத்துக்கு அவர் சீமைக்கமலத்தில் புல்லாக்கு - அப்பொழுது அது ஒரு முக்கிய நகை - வாங்கினதைப் பற்றிச் சொல்லுவார்கள். தம்முடையதைப் போல அவளுக்கும் பெரிய நாசி என்பதற்காக, தம் மூக்கில் வைத்து வைத்துப் பார்த்து வாங்கினாராம். எங்கள் தந்தையைப் போல அவளும் நல்ல அழகு. இன்று என்ன என்னவோ தலை அலங்காரங்கள்

செய்து கொள்ளுகிறார்களே, அவள் படிப்படியான கருவண்டு போன்ற தலைமயிரைக் கோடாலி முடிச்சுப் போட்டிருப்பது இன்றைக்கெல்லாம் பார்த்துக்கொண் டிருக்கலாம்; அவ்வளவு அலங்காரமாக இருக்கும்.

எங்கள் தந்தைக்கு 'மெம்பர்' உத்தியோகம் ஆன தும் அவர் தஞ்சை போயிருந்தார். அவர் வக்கீலாக இருந்தபொழுது அடிக்கடி கேஸ்களுக்காகச் செல்லும் ஊர்களில் ஒன்று தஞ்சை. அப்படியிருந்தும் அந்த ஊரில் அவரை வரவேற்றுச் செய்த உபசாரம் ஒரு மகோற் சவமாக இருந்ததாம். அதைத் தம்முடன் சேர்ந்து ஏற்கப் பக்கத்தில் திருவையாற்றில் இருந்த தம் சகோ தரியை வரவழைத்து ஊர்வலத்தில் தம் பக்கத்தில் வைத்துக்கொண்டு சென்றாராம் எங்கள் தந்தை. தம் முடைய பதவியைத் தாமே அநுபவிக்க வேண்டும் என்கிற குறுகிய மனப்பான்மை கொண்டவரல்ல அவர். தமக்கு வரும் பெருமைகளில் தம் மனிதர்களையும் சேர்த்துக் கொள்ளும் சுபாவம் அவருடையது. பாலம் சொல்லி யிருக்கிறாள்: எங்கள் பெரிய தகப்பனாரின் மகள் ஒருத்தி, தன் புக்ககத்தில் நடப்பதை யெல்லாம் மணிக்கணக்கில் எங்கள் தந்தையிடம் சொல்லிக் கொள்ளுவாளாம். 'இதென்ன, பெண்பிள்ளைகள் பேச்சு!' என்று அவர் அசட்டை செய்யாமல், முழுவதும் கேட்பதுடன், "பதிலுக்கு நீ இப்படிச் செய்யேன், சொல்லிவிடேன்" என்றுகூட யோசனை கூறுவாராம்.

ஒரு சமயம் எங்கள் தந்தையின் உறவினள் ஒருத்தி - வயது சென்றவள் - வந்திருந்தாள். அவளுக்கு மகோதரம் என்பார்களே, அந்த நோய் என்று நினைக்கிறேன். வயிறு, உடல் எல்லாம் ஒரேயடியாக வீங்கிக் கிடந்தன. அவள் எங்கள் தந்தையைக் காண ரிக்ஷாவில் வந்து இறங்கினாள். அவளால் வண்டியிலிருந்து சடுதியில் இறங்கிவிட முடியுமா? வாசலில் சாய்வு நாற்காலியில் படுத்திருந்தார் தந்தை. எழுந்து சென்று கை கொடுத்து அவளை

இறக்கிவிட்டிருக்கிறார். அவர் இறந்த பிறகு அவள் அதைச் சொல்லிச் சொல்லி அழுதாள். "வியாதிக்காரி யான என் கையைத் தொட்டு என்னை இறக்கினாயே!" என்று ஓயாமல் புலம்பினாள்.

இவ்விதம் எல்லோரும் விரும்பும்படியும் கௌரவிக் கும்படியும் இருப்பவர் எங்கள் தந்தை.

ஊட்டியில் முதல் மூன்று மாதம் நாங்கள் எல்லோரு மாக இருந்தோம். அப்புறம் ஒரு மாதத்துக்கு, நான், சுப்பலம், அவள் கணவர் ஆகிய மூவர் மட்டும் அவருடன் இருக்கும்படி ஆயிற்று. மற்றவர்கள் பள்ளிக்கூடங்களும் காலேஜ்களும் திறந்துவிட்டதனால் சென்னை சென்று விட்டார்கள். பாலம் சென்னைக் குடித்தனத்தைப் பார்த்துக்கொள்ளச் சென்றுவிட்டாள்.

பாலத்தின் குடும்ப நிர்வாகத்தைப் பற்றியும் புத்திக் கூர்மையைப் பற்றியும் எங்கள் தந்தைக்கு மிக உயர்ந்த எண்ணம் அல்லவா? அதற்கு ஏற்றபடி அவள் சென்னையி லிருந்து எங்கள் தந்தைக்குக் கடிதம் எழுதி இருந்தாள். அது, ஏதோ சென்னையில் எங்கள் பங்களாவில் மேலும் கட்டிடம் கட்டி அவர் செய்ய இருந்த சில சீர்திருத்தங் களைப் பற்றினது. அதைப் படித்துவிட்டு எங்கள் தந்தை, "வக்கீல் தோற்றுப்போவான். அப்படியல்லவா கேள்வி கேட்டு விவாதித்திருக்கிறாள்? பாலத்தின் புத்திக்கு அவள் ஆண்பிள்ளையாகப் பிறந்திருக்க வேண்டும்" என்று சொல்லிக் கொண்டார்.

என்னைப் பற்றிக்கூடச் சிலாகித்துக் கொண்டா ராம், சுப்பலத்தினிடம் ஒரு தடவை. அதை அவள் தன் கணவரிடம் சொல்லிக்கொண் டிருந்ததைக் கேட்டு நான் மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன். அப்பாவிடமிருந்து பாராட்டுப் பெறுவதென்றால் நாங்கள் அதைச் சாமா னியமாகக் கருதுவோமா? அவர் சிலாகித்துக்கொண்ட விஷயத்தைக் கூறிவிடுகிறேன். சுப்பலமும் நானுமாக அவருடன் இருந்தபொழுது அவரும் நானும் மட்டும்

ஒரு நாள் காலே உலாவச் சென்ருேம். அப்பொழுது எங்கள் தந்தை என்னை 'Love, Like' என்கிற இரு ஆங்கிலச் சொற்களுக்கும் பொருள் கூறும்படி கேட்டார். அவர்தாம் சொல்லிக் கொடுத்திருக்கிருரே. "Love என்ருல் ஆசையோடு நேசிப்பது; Like என்பதற்குச் சாதாரணமாகப் பிடிக்கிறது என்று அர்த்தம்" என்று கூறினேன். "அது சரி; பாலம், சுப்பலம், சாவித்திரி, அப்பு, மணி இவர்களில் நீ யாரை Like பண்ணுகிருய்? யாரை Love பண்ணுகிருய்? சொல்லு பார்ப்போம்" என்ருர். நான் வெகு நேரம் வரையும், "எல்லோரை யுந்தான்" என்று சொல்லி வந்தேன். அவர் விடவில்லே. திரும்பத் திரும்ப, சொல்லும்படி வற்புறுத்திஞர். கடைசியில் நான் அப்புவை Love பண்ணுவதாகவும், சுப்பலத்தை Like பண்ணுவதாகவும் சொன்னேன்.

அவர் அதோடு விடவில்லே. அதற்குக் காரணம் கேட்டார். "அப்பு சின்னவன், அழகாகப் பேசி எல்லாம் செய்கிருன். என்ஞேடு விளேயாடுகிருன். அதஞல் அவனே Love பண்ணுகிறேன் என்று சொன்னேன். சுப்பலத்தை Like பண்ணுவதற்கு அவள் பாலத்தைப் போல, என்னேக் கண்டிக்க மாட்டாள்; சாவித்திரியைப் போலப் போட்டிக்கு வருவதில்லே; அதஞல்தான்" என்றேன். "பாலம் உனக்கு நல்லதைத்தானே சொல்லுகிருள்?" என்ருர் அவர்.

"ஆமாம்; இருந்தாலும் அது எனக்குச் சங்கடமாக இருக்கிறது; பிடிக்கவில்லே" என்றேன். மணியைப் பற்றி என்ன சொல்லுகிறது? அவன் எங்களுடன் பழகுவதே இல்லேயே. தனியாகத்தானே இருக்கிருன்? இவ்விதம் நான் சொன்னது சரியானபடி உணர்ந்து சொன்னதாக அவருக்குத் தோன்றி இருக்கவேண்டும். அதுதான் அவர் என்னே மெச்சிஞா என்று நினேக் கிறேன்.

# மன்னர் மறைந்தார்

ஆறு மாத காலம் ஊட்டியில் இருந்த பொழுது நடுவில் ஏதோ காரணத்தால் சில தினங்கள் நாங்கள் யாரும் இல்லாமல் தந்தை மட்டும் இருக்கும்படி நேர்ந்தது. அதற்குள் பாலம் தவித்துப் போய் விட்டாள். தான் உடன் இருந்து கவனித்துக் கொள்ளா விட்டால் அவருக்கு என்ன நேர்ந்துவிடுமோ என்கிற கவலை அவளுக்கு. அவருக்கு நீர் ரோகம் ஏற்பட் டிருந்தது அல்லவா? அதற்கு ஆகாரம் பத்தியமாகப் பார்த்துக் கொடுக்க வேண்டும்; ஆட்கள் சரியாகக் கவ

ணித்துச் செய்ய மாட்டார்கள் என்கிற நினைவு அவளுக்கு. எங்களுக்குத் தாயின் ஸ்தானத்தைத் தானகவே ஏற்றுச் செய்தது போல, தன்னை அவருக்குப் பெரியவளாக நினைத்து அவரைக் கவனித்துக் கொள்வதில் கண்ணும் கருத்துமாக இருந்தாள் பாலம்.

உண்மையில் மிருத்தியு அவளை ஏமாற்றித்தான், அவள் பக்கத்தில் இல்லாத சமயம், அவரை அணுகி விட்டான். அவர் டில்லி தர்பாருக்குப் போயிருந்தார். அங்கேதான் அவர் மரணத்துக்குக் காரணமான அந்த அடிவயிற்று ரணம் ஏற்பட்டது. 'அவர் உடல்நிலை காரணமாக, தர்பாருக்குப் போகவில்லை; ஊர் திரும்பிவிட்டார்' என்கிற பேரிடி போன்ற செய்தியைத் தினசரியில் பார்த்து விட்டு நாங்கள் என்ன செய்தோம், எப்படி இருந்தோம் என்பவற்றைச் சொல்லச் சொற்களுக்குத் திறமை இல்லை. "அவருக்கு என்ன அசௌக்கியம் ஏற்பட்டிருக்கும்? ஏன் புறப்பட்டுவிட்டார்? எங்களுக்கு ஏன் சொல்லவில்லை? உடன் சென்றிருக்கும் சந்திரசூடன் எல்லாம் தெரிந்தவனுயிற்றே; அவனும் ஏன் ஒன்றும் தெரிவிக்காமல் இருந்திருக்கிருன்?" - இவைபோன்ற ஆயிரம் கேள்விகள் தோன்றி மனத்தை வாட்டி எடுத்துவிட்டன.

எங்களோடு பங்கெடுத்துக்கொண்டு எங்களுக்கும் மேலாகத் தவித்தவர், ஏ. கிருஷ்ணசாமி ஐயர். அவர் வைத்திய சாஸ்திரம் தெரிந்தவர். எங்கள் தந்தைக்கு ஏற்பட்டிருந்த நீர் ரோகத்தின் கொடுமையும் அவருக்குத் தெரியும். அதோடு அவர் ஸி. ஐ. டி. வேலை செய்து விசாரித்து, எங்கள் குடும்ப டாக்டர் நஞ்சுண்ட ராவ் தந்தி வந்து போயிருப்பதையும், அவர் ரணத்துக்கான மருந்து எடுத்துப் போயிருப்பதையும் தெரிந்துகொண்டார். அதனுல் அவருக்குப் பாதிப் பிராணன் போய்விட்டது எனலாம். இப்பொழுதுபோல ஆகாய விமானமா இருந்தது பறந்து செல்ல? மனசுதான் பறந்தது. டில்லிக்குச் சென்னையிலிருந்து ஐந்து நாள் போயாகவேண்டும். எங்கள்

தந்தை ஸ்பெஷல் ரெயிலில் சென்றிருந்தார். அது எங்கே எந்த ஸ்டேஷனுக்கு எப்பொழுது வரக்கூடும் என்பதை ரெயில்வே கயிடு மூலம் பார்த்துக்கொண்டு, அந்த அந்த ஸ்டேஷனுக்குத் தந்தி கொடுத்தார்கள். இவர்கள் தந்தி அவர்களுக்குக் கிடைக்கவில்லை. அதனால் பதிலும் வரவில்லை. தந்தி போய்ச் சேருமுன் வண்டி அந்த இடத்தை விட்டுப் போய்விட்டது. கடைசியில் புறப்பட்டே சென்று வழியில் சந்திப்பது என்ற தீர்மானத்தில், பாலம், மணி, கிருஷ்ணசாமி ஐயர், ஆயுர் வேத வைத்தியர், சியாமளா நான்கு பேரும் புறப்பட்டுப் போனார்கள். நாங்கள் சிறுவர்கள். "எங்கள் அப்பா வுக்கு ஒன்றும் இல்லாமல் இருக்கவேண்டும். அவரைச் சௌக்கியமாய் எங்களிடம் கொண்டுவந்து சேரும், ஸ்வாமி, ஸ்வாமி" என்று பூஜையறையில் சதா கண்களை மூடிக்கொண்டு ஈசுவரனை வேண்டினோம். அப்பொழுது ஈசுவரனிடத்தில் எங்களுக்கு இருந்த நம்பிக்கை இப்பொழுது இல்லை.

ரெயில் ஏறிச் சென்றவர்கள் ஏதோ ஸ்டேஷனில் இறங்கிக் காத்திருந்து வண்டி வந்தவுடன் சேர்ந்து கொண்டார்கள். "எதற்கு ஓடி வந்தீர்கள்?" என்று எங்கள் தந்தை கடிந்துகொள்வாரோ என்று எல்லோருக்கும் பயந்தான். ஆனால் அவ்விதம் ஒன்றும் அவர் சொல்லவில்லை. பாலம் பிறகுகூடச் சொல்லியிருக் கிறாள். அவள் வந்ததை முற்றும் ஏற்றுக்கொண்டு லேசாகப் புன்னகை செய்தாராம். தமக்கு மரணம் நெருங்கிவிட்டதை அவர் அப்பொழுதே தெரிந்து கொண்டிருக்கிறார். அவர் தமக்காகத் துளியும் வருந்த வில்லை. **"न हन्यते हन्यमाने शरीरे"** என்ற கீதா வாக்கி யத்தை நன்கு மனத்தில் கொண்டவர் அவர். அவரைப் பிரிந்து நாங்கள் துன்பப்படுவோமே என்றுதான் அவர் சிரமப்பட்டிருக்கிறார். தம் உடம்பு சரியில்லை என்பதை நாங்கள் முன்கூட்டி அறிந்தால் துடித்துப் போவோம்

என்றே அவர் சந்திரசூடனைத் தெரிவிக்க விடவில்லை யாம். "ரெயில் ஏறியவுடன், பேயறைந்ததுபோல வெளிறி இருந்த சந்திரசூடனின் முகமே சொல்லிற்றே எனக்கு, வந்திருக்கும் ஆபத்தை!" என்று பாலம் பிற்பாடு எவ்வளவோ தடவைகள் சொல்லியிருக்கிறாள். அவர் ரண சிகிச்சை செய்துகொள்ளுமுன் தமது உயிலில் திருத்தம் ஏதாவது செய்ய வேண்டியிருக்குமா என்று பார்க்க நினைத்திருக்கிறார். ஆனால் அவர் அதைச் செய்யவில்லை. "என் பெண்கள் பயந்துவிடுவார்கள். நீங்களே பாருங் கள், போதும்" என்றாராம் மகாகனம் சாஸ்திரியாரிடம். அவருக்குச் சந்நியாசத்தில் பற்றுதல் அதிகமே. "சந் நியாசம் வாங்கிக் கொள்ளுகிறீர்களா?" என்று அவர் நண்பர் யாரோ கேட்டதற்குக்கூட, "என் பெண்கள் வருந்துவார்கள்; வேண்டாம்" என்று கூறிவிட்டாராம். "அவருக்கு எதற்குச் சந்நியாசம்? அவர் அதற்குமேல் போனவர்" என்று சொல்லிவிட்டார் அவருடைய உற்ற நண்பர் ஏ. கிருஷ்ணசாமி ஐயர்.

ஒரு மன்னரின் மரணத்தைப் போலத்தான் எங்கள் தந்தையின் சாவு இருந்தது. ஊரே திரண்டு வந்து அவருக்கு மரியாதை செய்து கண்ணீர் விட்டுச் சென்றது. அவருடைய உற்ற நண்பர்களும் உறவினர் களும் உருகிப் போனார்கள். அவர் மக்களான எங்கள் இருதயத்திலே சூனியம் குடி கொண்டது. எங்கள் தந்தை 'என் பெண்கள்' என்று சொன்னது பாலத்தை யும் சுப்பலத்தையும் குறித்து இருக்கலாம்; அவர்கள் நினைவு தெரிந்தவர்கள்; துக்கம் பெரிது என்பதை அறிந்து துன்புறக்கூடியவர்கள் என்று. ஆனால் சிறுவர்களான எங்களுக்கும் வாழ்வுக்கே இன்றியமையாத ஒன்றை இழந்துவிட்டோம் என்கிறதை, எங்கள் உள்ளுணர்வு சொல்லத்தான் செய்தது. மலைச்சிகரத்திலிருந்து கீழே பாதாளத்திற்குத் தள்ளிவிட்ட மனநிலையில்தான் நாங்கள் இருந்தோம்.

இன்றும் ஏதோ ஒரு குறைவு எங்கள் மனத்தை விட்டு அகலவில்லை. அதனால் வாழ்கைக்கு வேண்டிய அளவு உற்சாகமும் வேகமும் எங்களிடத்தில் இல்லாமற் போயின. சிறு வயசிலே முளை விட்டிருந்த எங்கள் விசேஷ அறிவுகள் தளிர் விட்டு வளராமலே நின்று போயின.

இதுதான் நான் எங்களைப்பற்றிச் சொல்லிக் கொள்வது. நாங்கள் வளர்ந்த சூழ்நிலையும், எங்கள் தந்தை எங்களை வளர்த்த விதமும் சாதாரணமாக எல்லாருடையனவும் போல இருக்கின்றனவா? சொல்லுங்கள்.

முற்றும்

*September, 1960.*

Printed at the M. L. J. Press (Private) Ltd., Madras-4.